# திராவிடநாடு

30—3—58 | வார வெளியீடு | விலை 16காசு

## அயராதே!

( கி. ராமாநுசன் )

செந்தமிழ் நாடென்று சொல்லு — மற்றவர்
செவியினில் நுழைந்துநீ வெல்லு
சுதந்திரத் தமிழ்கனிச் சாறு — இந்தி
சுவைக்காத சுண்ணாம்பு நீறு
வந்தது இந்தியாம் மந்தி — வருகின்ற
வழிதடுத்திடு நீ இரத்தமே சிந்தி
நொந்திடும் பகையென்று எண்ணி — இந்தி
நுழையாமல் போரிடுவாய் கயற்கண்ணி;

கல்வியில் கட்டாயம் வேண்டும் — என்ற
கருத்தொலி கேட்குது மீண்டும்
பல்லிளித் திருக்கவா? மீண்டும் — இந்தி
பைந்தமிழை அழிக்கவா வேண்டும்
தள்ளியே வைத்திட்டோம் இன்று — இந்தி
தவணையில் வந்திடும் என்று
எள்ளியே பேசிடும் எவரும் — இந்தி
இருக்கா தெனும்வரை போரிடல் நன்று;

தண்டமிழ்ப் பள்ளியில் இந்தி — அஞ்சல்
தலையுறை அட்டையில் இந்தி
துண்டாட வருகின்ற இந்தி — அதை
துரத்திடுவோம் தமிழர்கள் முந்தி
கண்டோடும் கனிச்சாறு போல — தமிழ்
கண்ணாகும் தமிழர்க்கு மேலே
மூண்டெழும் தமிழர்கள் நாட்டில் — இந்தி
முறையாக ஒழிந்திடல் வேண்டும்.

# தீப்பெட்டித் தொழில்

( K. S. S. ஆறுமுகசாமி )

தென்னாட்டில்-குறிப்பாக சிவகாசி, சாத்தூர், ஏழாயிரம்பண்ணை, கோவில் பட்டி போன்ற பகுதிகளில் நூற்றுக்கு மேற்பட்ட தொழிற்சாலைகளில் மிகவும் நல்ல முறையில் நடைபெற்று வந்த தீப்பெட்டித் தொழிலானது சென்ற ஒருவருட காலமாகப் படிப்படியாய்க் குறைந்துவந்து, இன்று மிகவும் மோசமான நிலையை அடைந்திருக்கிறது. இதற்குக் காரணம் வெளிப்படையாகக் கூறுவதானால், மத்திய, மாநில அரசினரின் பொறுப்பற்ற போக்கேயாகும்.

மேற்கூறிய நான்கு இடங்களிலுள்ள தீப்பெட்டித் தயாரிப்பு நிலையங்கள் மாத்திரம் மாதம் ஒன்றுக்கு சுமார் 1¼ இலட்சம் குரோஸ் தீப்பெட்டிகள் தயார் செய்து வருவதன் மூலமாக மத்திய அரசாங்கத்துக்கு சுமார் ரூ. 6 கோடி கலால் வரியாக ஆண்டு ஒன்றுக்கு செலுத்தி வருகின்றன. ஆனால், இவ்வளவு பெரும் தொகையை வரியாக அளிக்கும் தொழிலுக்கு எந்தக் குறைந்த அளவிலாவது மத்திய அரசினரிடமிருந்து சலுகை பெறப்படுகிறதா என்றால், 'இல்லை' என்றுதான் கூற வேண்டியதிருக்கிறது.

40 குச்சிகள் கொண்ட ஒரு குரோஸ் தீப்பெட்டியின் உற்பத்திக் கிரயம் (மருந்து சாமான், தாள் வகைகள், குச்சி, பெட்டிகள், சம்பளம், கூலிச் செலவு உட்பட) ரூ. 1 ஆகிறது. ஆனால், ஒரு ரூபாய் கிரயம் ஆகும் ஒரு குரோஸ் தீப்பெட்டிக்கு கலால் வரியோ ரூ. 3—4—0 செலுத்த வேண்டியிருக்கிறது. இது மிகவும் அநியாயமானதாகும். அந்நியரெனக் கருதப்பட்ட ஆங்கிலேயர் ஆட்சியில், முதலில் தீப்பெட்டிகளுக்கு வரி கிடையாது. பிறகு 40 குச்சிகளுக்கு குரோஸ் 1-க்கு ரூ. 1 வீதமும், அதன் பின்பு ரூ. 2 வீதமும் வரி விதிக்கப்பட்டது. ஆனால் மக்களாட்சி மலர்ந்திருப்பதாகக் கூறப்படும் இன்று நம்மவர் என்று கருதப்படும் நேரு அவர்களின் தலைமையில் இயங்கி வரும் காங்கிரஸ் ஆட்சியில் 40 குச்சி தீப்பெட்டிகளுக்கு குரோஸ் ஒன்றுக்கு வரி ரூ. 3—4—0 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. வெளிநாட்டு இறக்குமதிப் பொருள்களுக்குக்கூட இவ்வளவு அதிகமான அளவில் வரி விதிக்கப்படுவதில்லை.

ரூ. 2 'டியூட்டி'யாய் இருக்கும் போது, 'ரிபேட்' 2 அணா கொடுக்கப்பட்டது. அந்த விகிதத்தில் ரூ. 3-4-0 'டியூட்டி'க்கு 3¼ அணா (21 புதிய காசுகள்) 'ரிபேட்' கொடுக்கப்பட வேண்டும். ஆனால் தற்சமயம் 'ரிபேட்' கொடுக்கப்படுவது 10 புதிய காசுகள் தான்.

உற்பத்தியாளர்கள் வேண்டுகோளுக்கிணங்க 30—50 குச்சிப்பெட்டிகள் உற்பத்தி செய்ய அனுமதித்த சர்க்கார், 40, 60 குச்சிப் பெட்டிகளுக்குத் தள்ளுபடி (ரிபேட்) தொகை கொடுக்கப்பட்டு வந்ததுபோல், 30, —50 குச்சிப் பெட்டிகளுக்குக் கிடையாதென்று மறுத்துவிட்டது; ஆகவே, மேற்படி இரண்டு புதிய அளவுகள் செய்ய அனுமதித்தும் பயனில்லை என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

மத்திய விற்பனை வரி என்ற பெயரால், இன்று கலால் வரி கட்டும் தொகைகளும் சேர்த்து மேற்படி வரி வசூலிக்கப்படுகிறது.

அதாவது வரிகளுக்கும் வரி வசூலிக்கப்படுகிறது. இது எந்த அரசாங்கத்திலும் கேள்விப்பட்டிருக்க முடியாத அநீதியாகும். உற்பத்தியாளர்கள் இதை எதிர்த்து எவ்வளவோ வாதாடியும் பலன் கிடைக்கவில்லை.

இந்த விதமாக வரிகள் உயர உயர உற்பத்தியாளர்களுக்கு கடந்த 2 வருடங்களாகவே பெரும் அளவில் நஷ்டம் ஏற்பட்டு வருவதுடன், தீப்பெட்டி விற்பனை விலை கூடியிருப்பதால், மக்களிடையே வாங்கும் சக்தி நாளுக்கு நாள் குறைந்துகொண்டே போகிறது. இதனால், இதுவரை மிகவும் குறைந்த ஊதியமே அடைந்து வந்த தொழிலாளர்களுக்கு வேலையே இல்லாமல் போய்விடும் சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

காந்திய முறைப்படி நடைபெற்று வரும் இக்குடிசைத் தொழிலை நம்பி வாழும் இலட்சக் கணக்கான தொழிலாளர்களின் வயிற்றில் அடித்துவிட்டு, அந்நிய நாட்டு மூலதனத்தில் நடைபெற்று வரும் இயந்திரத் தொழிற்சாலைகளுக்கும் (Wimco) இதே விகிதத்தில், வரி விதிப்பதன் மூலம், அவர்களுக்கு ஆதரவு கொடுத்து அந்நியச் சுரண்டலுக்கு வழிவகுத்துக் கொடுக்கும் முறையில் மத்திய அரசினர் நடந்து வருகின்றனர்.

மற்ற மாநில அரசினர் புதிய, பெரிய தொழிற்சாலைகளை நிறுவி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கி வருகிறார்கள்; ஆனால் நமது சென்னை மாநில அரசினரோ, புதிதாகத் தீப்பெட்டித் தொற்சாலைகளை நெல்லை, தஞ்சை பரமக்குடி போன்ற பகுதிகளில் நிறுவப்போகிறார்களாம். வரி உயர்வினால் தற்போது நடைபெறும் தொழிலுக்கு ஆபத்து ஏற்பட்டுத் தனிப்பட்டோர் சிக்கனமான செலவில் நடத்தும்போதே நஷ்டம் ஏற்பட்டுவரும் இந்நிலையில், 'நாங்களும் தொழிற்சாலை நிறுவுகிறோம்' என்று கூறிக்கொண்டு, தீப்பெட்டித் தொழிற்சாலைகள் ஏற்படுத்தி, இதன் மூலம் சில நூறு பேர்களுக்கு வேலை கொடுக்கப் போவதாகக் கூறுகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் சிவகாசி சாத்தூர் பகுதிகளில் பதினாயிரக் கணக்கானவாகள் வேலை இழப்பதற்குக் காரண கர்த்தாக்களாவதுடன் மக்களை வாட்டி வதைத்து வசூலிக்கப்படும் வரிப் பணத்தை, இலாபம் கிடைக்க இயலாத சூழ்நிலையில் உள்ள தொழிலில் முடக்குவதன் மூலம் இலட்சக் கணக்கில், வீணாய் நஷ்டமடைந்து வீண் விரயம் செய்த தவறுக்கும் ஆளாகிறார்கள் — நமது மாநில அரசினர்!

தென்னாட்டின் பெரிய முக்கியமான குடிசைத் தொழிலான தீப்பெட்டித் தொழில்மூலம் மத்திய அரசுக்குகோடிக் கணக்கில் வரி போய்ச் சேருவதாலும், மத்திய அரசினர் இத் தொழில் வளர்ச்சியில் பாராமுகமாய் இருப்பதாலும், வடக்கு தெற்கு என்ற பிரிவினை மனப்பான்மை வலுவடைந்து வரும் இந்நாளில், இத் தீப்பெட்டித் தொழிற் பிரச்சினையானது பிரிவினை பேசுவோருக்குப் பெரும் ஊன்றுகோலாகப் பயன்படக்கூடுமாதலால், உடனடியாய் மத்திய அரசினர் இது விஷயத்தில் தலையிட்டு ஆவன செய்ய வேண்டுவது அவசியமும் அவசரமும் ஆகும்.

மாநில அரசினரும் புதிய தீப்பெட்டித் தொழிற்சாலை ஏற்படுத்தும் எண்ணத்தைக் கைவிட்டு, அதில் முடக்கி வீணாக நஷ்டமடையும் பணத்தை ஏற்கனவே, தொழில் நடத்திவரும் உற்பத்தியாளர்களுக்குப் பயன்படும் வகையில் செலவு செய்யவேண்டியது தான் நியாயமாகும். மேலும், மத்திய விற்பனை நிலையங்களையும் உடனடியாய் நிறுவி, இத்தொழிலையே நம்பியிருக்கும் இலட்சக் கணக்கான தொழிலாளர்களின் பாதுகாப்புக்கு உத்ரவாதம் அளிக்க வேண்டியது அரசினரின் தலையாய கடமையாகும். அவசியமானால், அரசினரேகூட இத்தொழிலை ஏற்று நடத்த முன்வரலாமென்பது எனது தாழ்மையான அபிப்பிராயமாகும்.

★

# அணை - கட்டு

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [30-3-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 37

"அணைக்கட்டுகள்யாவும்வடக்கே! அவதிப்படும் மக்கள் தெற்கே!!" என்று நாம் சொல்லும்போது ஆத்திரப்படும் தேசீயத் தோழர்கள் உண்டு.

சட்ட சபையில், இந்தக் கிழமை நீர்ப்பாசனம் பற்றிய விவாதம் நடைபெற்றபோது, நாம் மட்டுமல்ல, காங்கிரஸ் எம். எல். ஏ-க்கள்கூட 'அங்கே அணை வேண்டும், இங்கே, நீர்ப்பாசனம் சரிவர இல்லை' என்று சொல்லியிருக்கிறார்கள்.

பயிர்த் தொழிலை முதல் தொழிலாகக்கொண்ட நாட்டில், அதற்கு வேண்டிய தண்ணீர் கிடைக்கும்படி செய்வது மிகமிக முக்கியமாகும்! நீர் கிடைத்தால் கரம்பு, கழனியாகும் — வரப்புயர நீருயரும், நீர் உயர நெல் உயரும் — நெல்லுயர வளம் கொழிக்கும். இந்த நோக்கத்தோடு, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது பல பெரிய அணைக்கட்டுகள் போடும் திட்டங்கள் பல தீட்டப்பட்டன. அவைகளில் பல; வடக்கேயே அமைந்துவிட்டன! தெற்கின் நிலைமையைச் சரிவர எடுத்துச் சொல்லவும், வாதாடவும் வழியற்றுப் போய்விட்டது!!

முன்பெல்லாம் அணைக்கட்டுகள் என்றால், அதன் மூலம் தேங்கும் நீரைத் தேக்கி, வாய்க்கால்கள் மூலம் வயல்களுக்குப் பாய்ச்சுவதே முக்கிய குறிக்கோளாயிருந்தது. இப்போது, தேங்கிய நீரை, வெளியே விடும்போது ஓடிவரும் தண்ணீரைக் கொண்டு மின்சாரமும் உற்பத்தி செய்யப்படுகிறது! மின்சாரம், இந்த யுகத்தில், தொழில் இயந்திரங்கள் உருள மிகமிக அவசியமாகும். எனவே, ஒரு அணைக்கட்டு, பயிர்த் தொழிலுக்கு மட்டுமின்றி, தொழில் துறைக்கும் இன்றியமையாததாகும்.

இப்படிப்பட்ட அணைக்கட்டுகள் வடக்கே பல உண்டு! தெற்கே, பெரிய திட்டங்கள் அந்தளவுக்குப் போடப்படவில்லை என்பது நமது குறையாகும். இதை, நாம் எடுத்துச் சொன்னபோது, காங்கிரசாருக்கு நம்மீது கோபம் வந்தது. நாம் புள்ளி விபரங்கள் தந்தபோது, "அணைக்கட்டு எங்கேயிருந்தால் என்ன! வடக்கே இருந்தாலென்ன—தெற்கே இருந்தாலென்ன" என்று பதில் தர முயன்றார்கள். ஆனால் இப்போது சட்ட சபையிலே, காங்கிரஸ் உறுப்பினர்களே, தமது தொகுதியின் குறைகளை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்!!

இங்கு நீர்ப்பாசனத் திட்டங்கள் பற்றிய விவாதம் நடைபெற்றதற்கு முதல் நாள், டில்லியிலும் பார்லிமெண்டில் விவாதம் நடைபெற்றிருக்கிறது. அப்போது ஒருவர், நாம் கூறிவரும் கருத்தை எதிரொலித்திருக்கிறார். "நீர்ப்பாசன வசதிகள் செய்வதில், தெற்குப்பற்றி இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும்" என்று நாசுக்காக எடுத்துச் சொல்லியிருக்கிறார். நாசுக்குக்குக் காரணம், அவர் நம்மவரல்ல! காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த டாக்டர் சுப்பராயன்!!

ஈசுவர அய்யர் என்கிற மலையாளத்து உறுப்பினரும், "மலைகளிலிருந்து வழியும் நீர், வீணாகிறது எமது பகுதியில்! அவைகளைத் தேக்கினால் அதிக மின்சாரம் கூடக் கிடைக்கும்" என்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

இவர்கள், தி. மு. க-க்கள் அல்ல! எனினும், தென்னாடு, நீர்த் தேக்கங்கள் துறையில், டில்லியின் முழு ஆதரவையும் பெறவில்லை என்று சோகித்திருக்கின்றனர். தென்னகத்திலிருந்து சென்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் பேச வாய்ப்புக் கிடைத்திருக்குமாயின், எல்லோரும் டாக்டர் சுப்பராயனைப்போல், வருத்தமும் விருப்பமும் தெரிவித்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. அந்தளவுக்கே, வடக்கே போடப்பட்டுள்ள திட்டங்கள், அவர்தம் கண்ணையும் கருத்தையும் ஈர்த்து வருகின்றன!!

வடக்கில் முதல் ஐந்தாண்டுத்திட்டத்தில் நல்ல பல திட்டங்களைப் போட்டார்கள். சரி! இப்போது இரண்டாவது 5-ஆண்டுத் திட்டம் போட்டார்களே, இதிலாவது சில பெரிய நீர்த்தேக்கங்களுக்கு வழி காணலாகாதா என்று வலியுறுத்தினால், "பணம்?" என்று கேள்விகளை எழுப்புவர்.

பணமில்லை! பணமில்லையே!!—என்பது, டில்லி அடிக்கடி பாடிடும் பல்லவியாகும். நீர்த் தேக்கங்கள் மட்டிலுமல்ல, புது ஆலைகள் அமைக்கவேண்டுமென்றாலும், சேலத்து இரும்புக்கு ஒரு ஆலை அமைத்திடுக என்று சொன்னாலும், எதற்கும், 'இல்லையே, பணம்!' என்கிறார்கள். பணமில்லை, எனும்போது, பரிதாபம் வரவே செய்கிறது! ஆனால், அழியும் பணம் எப்படியெல்லாம் போகிறதென்றெண்ணும்போது, வயிறெல்லாம் எரிகிறது!!

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது வடக்கே போடப்பட்ட மிகப் பெரிய அணைத்தேக்கங்களில் ஒன்று, தாமோதர் நதிப் பள்ளத்தாக்குத்

திட்டமாகும். இதற்காக 79¼-கோடி ரூபாய் செலவழியும் என்று 1951-ல், சொன்னார்கள். 1957-ல், அது போதாது; 103-கோடி ரூபாய்கள் இருந்தால்தான் வேலை முடியும் என்றார்கள்.

கிராமப் புறங்களில் பாடப்படுவதுண்டு, "மூணு கிணறு வெட்டினேன் — இரண்டு பாழ்! ஒன்றில் தண்ணியேயில்லை!!" என்று. அதே கதியிலிருப்பதாக, 24-ந்தேதி வெளிவந்துள்ள, தணிக்கையாளர் அறிக்கை சொல்லுகிறது.

பற்பல சிறுசிறு தேக்கங்கள் கட்டி அவைகளையெல்லாம் ஒன்றாக இணைத்ததுதான் மேற்படி தேக்கமாகும். அதில் ஒன்று தலையார் அணை என்பது. இதை 1952ல் கட்டிமுடித்தார்கள். ஆண்டுகள் 5 ஓடிவிட்டன! இன்றும் அதன் வழியாக ஓடும் நீர், மக்களுக்குப் பயன்படவில்லையாம்—35 இலட்சம் இதற்கு மட்டும் செலவழித்தார்களாம் — இன்றும் டில்லியின் பரிசீலனையில் இருக்கிறதாம்!! 1955ல் துர்காபூர் அணை என்று ஒன்று கட்டினார்கள்—தாமோதர் நதித் திட்டத்தின் ஒரு பகுதியாக. அந்தத் தண்ணீருக்கு எப்படி வரிபோட்டு வாங்குவது என்பதில் மேற்கு வங்கச் சர்க்காருக்கு ஏற்பட்ட சட்டக் குழப்பத்தின் விளைவாக, இன்னும் நீர், திறந்துவிடப்படவில்லை!! கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய் செலவிட்டு கோனார் அணைக்கட்டு எனும் ஒன்றையும், தாமோதர் திட்டத்தின் பகுதியாகக் கட்டினார்கள். இதிலிருந்து, விரும்பிய மின்சாரம் கிடைக்குமா என்பது இன்னும் சந்தேகத்தில் உள்ளதாம்!!

பயன்படவில்லை—தகராறு—சந்தேகம், இப்படியிருப்பதாகத் தணிக்கையாளர் குழு கூறுகிறது. இந்த இலட்சணத்தில், கோடிக் கணக்கான ரூபாய்களைக் கொட்டிக் கட்டப்படும் திட்டங்கள் இருக்கின்றன. நமக்கோ, பணமில்லையாம், பணம்!!

இப்படி, சிக்கலும் வேதனையும் நிரம்பியுள்ள இத்திட்டங்களில், அணைகள் கட்டப்படுவதற்கென ஆகும் செலவைவிட, அதிகாரிகளுக்கென அழியும் செலவின் விகிதம் அதிகமென்றும் தணிக்கையாளர் குழு தெரிவிக்கிறது. இவ்வளவு அதிகமாக அதிகாரிகள் இருந்தும் காரியம் எப்படி நடக்கிறது தெரியுமா? பொகரா மின்சார உற்பத்தி நிலையம் என்பதை இரண்டே மாதங்களில் முடித்தனராம்! அதே போன்ற, மைதான் திட்டம் என்பதை மாதம் 30 ஆகியும் இன்னும் கட்டிமுடிக்கவில்லையாம்!!

பணம் அழிவது, கண்ணுக்கெதிரே எடுத்துக் காட்டப்படுகிறது. பரதவிக்கும் தென்னகத்தவரோ, நீரில்லாப் பாலாற்றையும், காய்ந்திடும் கழனிகளையும் காட்டி, கதறிடவேண்டிய நிலை நீடிக்கிறது.

டில்லியோ, நமது ஆசைக்கு அணை போட முயலுகிறதே அன்றி, விரயமாகும் பணத்துக்கு அணைகட்டி, நிர்வகிக்கவில்லை என்று குழு கூறுகிறது. அணைக்கட்டுகள், பல, வடக்கே! இப்படியெல்லாம் பணம் செலவழிந்தாலும், விடோம் முயற்சியை என்று கட்டிக்கொண்டேயிருக்கிறார்கள். ஆசைகள் தான், நமக்கு, ஏராளம்! ஐயோ பணமில்லையே என்று பரிதாபச் சிந்து மட்டும் அடிக்கடி பாடிக் காட்டப்படுகிறது, நமக்கு!!

★

# பேசினால்மட்டும் போதுமா?

ஒன்றைப் பற்றிப் பன்னிப் பன்னி பேசிக்கொண்டிருப்பதை விட, அதனைச் செயல் முறையில் செய்து காட்டுவதே நல்லது. இந்த நல்ல கருத்தமைந்த சொற்றொடர் உலகமுழுவதும் ஒப்புக் கொள்ளப் பட்ட ஒன்றாகும்.

ஆனால், பேச்சால் சாதிக்க வேண்டியவையும், செயலால் சாதிக்கவேண்டியவையும் என இருபெரும் முறைகள் உலகுக்கு மிகமிக இன்றியமையாதன என்பதைப் பலர் உணர்வதில்லை. பேசுவதின் வாயிலாகவன்றி வேறு எந்த முறைகளைக் கையாண்ட போதிலும், வெற்றி கிட்டாதனவும், செயல் முறையாலன்றிப் பிற எதனாலும் வெற்றி காண முடியாதனவும் உலகெங்கனும் எந்தக்காலத்திலும் உண்டு என்பதை உணர்பவர்கள், பேசுபவர்களையும், செயல்படுவோரையும் சமநிலையில் வைத்தே மதிப்பர்.

ஆனால், பேச்சுக்கும் செயலுக்கும் உள்ள உயர்வையும், அவைகளால் நாட்டுக்கு ஏற்படும் நலன்களையும் அறிய முடியாதவர்கள், பேசுபவர்களைமட்டும் தனியாகப் பிரித்து வைத்துக் கொண்டு, "இவர்களுக்குப் பேசத்தான் தெரியுமேயன்றி ஏதாவது உருப்படியான காரியம் செய்யமுடியாதா" என்று பேசவும் செய்யவும் தெரியாத நிலையில் நின்று கூறுவதைக் காணும்போதுதான் அவர்கள்பால் நமக்கு அனுதாபமும் ஆத்திரமும் ஏற்படுகிறது.

உதாரணமாக, நம்மை (தி. மு. க.வைப்) பற்றிக் காங்கிரசாரும் பிற கட்சியினரும் பேசும் போது இது போல் பேசத் தவறுவதில்லை. சட்டசபையிலும் சரி, நமது மாநாடுகள்—பொதுக்கூட்டங்களிலும் சரி நாம் பேசுவதைக் கேட்கவும் காணவும் நேரும்போதெல்லாம் இந்த "முறை"யை அவர்கள் கையாளுகிறார்கள். காரணம்: நாம் பேசுவதுபோல் அவர்களால் பேசமுடியவில்லையே என்பதன்றி இதற்கு வேறு என்ன கூறமுடியும்?

இன்னொரு தப்புக் கணக்கையும் அவர்கள் போட்டுக்கொண்டு நம் மீது இந்த 'வசைமாரி'யைப் பொழிகிறார்கள். இவர்களால் எந்தக் காரியத்தையும் செய்யமுடியாது; எனவேதான் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பது அவர்களது தப்புக்கணக்குகளில் ஒன்று. பேசும் நாம்—எழுதும் நாம்—செயலிலும் பின்வாங்கியவர்கல்ல — பேச்சிலும், எழுத்திலும் எவ்வளவு திறமையுண்டோ அவ்வளவு திறமை செயலிலும் உண்டு. ஆனால் இப்போது பேச்சோடு மட்டும் இருக்கவேண்டிய சூழ்நிலையில் இருப்பதால் நம்முடைய எண்ணங்களை அதாவது நாட்டுக்குத் தேவையான நல்லகாரியங்களைச் செய்து காட்ட முடிவதில்லை—இதற்குக் காரணம் அதிகாரம் நம்மிடம் இல்லை.

(13-ம் பக்கம் பார்க்க)

# 'சாதிகள் இருக்குதடி பாப்பா!'

அன்று, "காலை பத்துமணிக்கு 'சாதிக் கொடுமைகள்' என்னும் பொருள்பற்றிச் சமுக சேவகர் சடகோப (அய்யர்) அவர்கள் பேசுவார் அனைவரும் வருக" என்ற அறிக்கை அந்த மண்டபத்தின் முன் தொங்கிக்கொண்டிருந்தது.

'என்ன தான் பேசுவார்கள், கேட்போமே' என்று நினைத்துப் பலர் மண்டபத்தினுள் நுழைந்து கொண்டிருந்தார்கள். "என்ன போங்கோ! காலம் கலிகாலமாய்ப் போனதும்போதும், நம்மளவாளே அவாளுக்கெல்லாம் இடம் கொடுத்துப் பேசுருளே!' என்று இந்தக் காலத்தில் வாழும் சில அந்தக் காலங்கள் பேசிக்கொண்டு சென்றன. 'இந்த இருபதாம் நூற்றுண்டின் இறுதிப் பகுதியிலும் 'சாதிக் கொடுமைகள்' என்று பேசிச் சீர்திருத்தம் செய்யவேண்டிய அளவுக்கு இருக்கிற காலக் கொடுமையை நினைத்து மனம் வெதும்பிச் சென்றனர் சிலர்.

கூட்டம் ஆரம்பிக்கப்போகும் சமயம். அந்தக் கூட்டத்தைக் கூட்டியவர்களுள் ஒருவர் மேடையின் மீதேறி மக்கள் கூட்டத்தை ஒரு கண்ணேட்டம்விட்டார். எல்லாம் ஒரே 'வெள்ளை சள்ளை'யாக உட்கார்ந்திருந்ததைப் பார்த்துத் தானே என்னவோ, அவர் முகம் ஒருவாறு மாறுபட்டது. உடனே மண்டபத்தின வெளியே சென்று தெருவில் அப்பக்கமும் இப்பக்கமும் பார்த்தார் அவர். ஒரு ஏழையை — எளியவனை — வறியவனை—சுருங்கக்கூறின் சமுதாயத்தால் தாழ்த்தப்பட்டவனை நாடுகிருர் என்பதை அவர் பார்வை எடுத்துக் காட்டியது. சாதிக் கொடுமைகள் பற்றிப் பேசப்படும் கூட்டத்தில் எல்லாம் 'மேலானவர்'களே இருந்துவிட்டால் கூட்டப்பட்ட கூட்டம் பொருளற்றதாகிவிடுமே என்று எண்ணித்தான் அவர் ஒரு சில 'கீழானவர்'களையும் தேடிக்கொண்டிருந்தார் போலும்!

அவர் பார்வையில் பட்டது ஒரே ஒரு குப்பை கூட்டுபவன் மட்டும்தான். தானுண்டு தன் கடமையுண்டு என்று தன் வேலையைச் செய்துகொண்டிருப்பவன் அவன். சுருங்கக் கூறினுல், சமுகம் வாய் செத்தவர்களைத்தானே விரும்புகிறது, அத்தகையவன் தான் அவன்.

"இந்தாப்பா, இங்கேவா" என்றழைத்தார் தேடியவர். "என்னங்க" என்று ஓடோடியும் வந்தான் அவன். பணிவன்போடு ஏதோ வேலையிடப் போகிருர் என்று நினைத்து நின்ருன்.

**அன்பு**

"உள்ளே போய்க் கூட்டத்தில் கலந்துகொள்ளேன். உங்களுக்காகத்தானே இதுபோல் கூட்டம் நடத்துகிறோம்; இப்படி நீங்களே ஒதுங்கி ஒதுங்கி நடந்துகொண்டால் அப்புறமெப்படி சாதிக் கொடுமைகள் நீங்கும்? ம்...ம் போ! போய்ப் பேச்சைக் கேள்" என்று கூறி அவனை உள்ளே அழைத்துச் சென்றதோடு மட்டுமல்லாமல், நடுவில் ஒரு இடமும் பார்த்து உட்காரவைத்தார்.

அவன் ஓநாய்க் கூட்டத்திற்கு நடுவில் அகப்பட்டுத் திண்டாடும் ஆடுபோல் மிரள மிரள விழித்தான். ஒரு முறை தன் அழுக்கு நாலுமுழத் துண்டையும் மற்றவர்களின் சலவை கலையாத உயர்ந்த கதர்ச் சட்டைகளையும் பார்த்து அவனே வெட்கப்பட்டுக் கொண்டான். மண்டபத்தின் சுவரில், உலக உத்தமர் காந்தி, ஒரு குட்டநோய்க்காரனுக்குச் சிகிச்சை செய்ததும், ஒரு ஆதித்திராவிடச் சிறுவனையும் இந்துமதச் சிறுவனையும் பக்கத்தில் அமர்த்தி இருவரையும் ஒன்று கூட்டி மகிழ்ந்ததையும், நிழற்படங்களாகப் பிடித்து மாட்டியிருந்தார்கள். இவ்வாறு படங்களைப் பார்த்துக் கொண்டே இருக்கையில், உட்கார்ந்த அவனை அருகிலிருந்த சில பிரமுகர்கள் தம் பக்கத்தில் வந்து உட்கார்ந்து தொலைத்தானே என்று முகம் சுளித்தனர்.

திடீரென்று மண்டபமே அதிரும் வகையில் கைதட்டல் ஒலி எழுந்தது. பிரமுகர்கள் பலர் பின்தொடர அன்று பேசவேண்டிய சமுக சேவகர் சடகோப (அய்யர்)—(அவர் இப்படித்தான் எழுதிக் கையெழுத்திடுவது வழக்கம)—மேடைக்கு வந்தார். மிக எளிய உடையில் விளங்கிய அவர் கையில் 'பாரதியார் கவிதைகள்' என்ற புத்தகம் ஒன்றிருந்தது. வந்தவர் கூட்டத்தை ஒருமுறை நோக்கிப் புன்சிரிப்பு ஒன்றை விடுத்தார். வரவேற்றுப பேசிய ஒருவர் அய்யரின் சமுகத் தொண்டுகளைப்பற்றி வெகுவாகப்புகழ்ந்துவிட்டு "சாதிப் பாகுபாடுகள் ஒழியப் பாடுபட்டு வரும் சமுக சேவகர் அவர்கள் இக்கூட்டத்திற்கு வந்து பேச ஒப்புக்கொண்டமைக்கு என

மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.'' என்று கூறி அவரைப் பேச அழைத்தார்.

சமுக சேவகர் சடகோபர் பேச எழுந்தார். எல்லோரும் மற்றுமோர் முறை கையொலி எழுப்பினர். சடகோபர் தன் பேச்சை நிதானமாக ஆரம்பித்தார். சாதிக் கொடுமைகள் இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகில் பல நாடுகளிலும் நடைமுறையில் இருந்தது—இருக்கிறது என்றும், அதைப் போக்குவதற்கு எல்லா நாடுகளும் முன்வரவேண்டும் என்றும் தன் பேச்சின் ஆரம்பத்தில் கூறிவிட்டுப் பின் மனிதனுக்கு மனிதன் ஏற்றத் தாழ்வில்லை என்பதைப் பல ஆதாரங்கள் காட்டி விளக்கினார்.

அடிக்கடி பாரதியார் கவிதைகளிலிருந்து மேற்கோள் காட்டினார். "நண்பர்களே! இந்த நாட்டில் சாதி முறை ஒழிய வேண்டுமென்று நம் நாட்டின் தந்தை மகாத்மா தன் ஆயுள் முழுவதும் போராடினார். அவரது இயக்கத்தைப் பின்பற்றி மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும்,

ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்மம் இத்தேசத்தில் எய்தினராயின்
வேதியராயினும் ஒன்றே—அன்றி
வேறுகுலத்தினராயினும் —ஒன்றே
ஈனப் பறையர்களேனும்—அவர்
எம்முடன் வாழ்ந்திங்கிருப்பவர்—அன்றோ?

என்று, வீரமுழக்கம் செய்தார். அன்றிருந்து இன்றுவரை எத்தனையோ பேர் ஜாதி ஒழிய வேண்டும் எனப் பாடுபட்டுவருகிறார்கள். ஆனால் முயற்சி முழு அளவில் வெற்றி கிடைக்கவில்லை! இது மிகவும் துர்ப்பாக்கியமான நிலை! ஆகவே பெரு மக்களே! சமுகத்தில் ஒவ்வொருவரும் ஜாதிகள் ஒழிய தன்னலான கடமையைச் செய்துமுடிக்க வேண்டும்,

ஏழையென்றும் அடிமையென்றும்
எவனும் இல்லை ஜாதியில்,
இழிவுகொண்ட மனிதரென்பது
இந்தியாவில் இல்லையே
..................................
மாதர் தம்மை இழிவுசெய்யும்
மடமையைக் கொளுத்துவோம்;
பார்ப்பானை ஐயரென்ற காலமும்
போச்சே
..................................
..................................பிச்சை
ஏற்பாரைப் பணிகின்ற காலமும்
போச்சே—நம்மை
ஏய்ப்போருக் கேவல் செய்யும்
காலமும் போச்சே

என்ற பாரதியாரின் மணிவாசகங்களைக் கூறி இத்துடன் என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்'' என்று உணர்ச்சி ததும்பப் பேசிவிட்டு உட்கார்ந்தார்.

அவரது பேச்சைக் கேட்ட அவனும் புத்துணர்ச்சி பெற்றவன் போலானான்! ஜாதியில் இழிவு கொண்ட மனிதரென்பது இந்தியாவில் இல்லையே', பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே! இந்த இரண்டு வரிகளும் அவன் காதில் ஒலித்துக்கொண்டே இருந்தன. சடகோபர் தன் பேச்சில் இவ்வரிகளைக் கூறக் கேட்டதும் அவன் தன்னை மறந்து கைதட்டினான். அதைக்கண்ட அருகிலிருந்த சிலர் அவனை ஒரு மாதிரி வெறுப்புடன் நோக்கினர். அந்த இரண்டு வரிகளையும் ஒரு முறை தன் மனதிற்குள் சொல்லிப் பார்த்தான். வரவில்லை. உடனே சொன்னவரைப் பார்த்தான். பேசி உட்கார்ந்த அவர் அசதியுடன் ஆசனத்தில் அமர்ந்து இளைப்பாறிக்கொண்டிருந்தார். அவர்முன் பாரதியார் கவிதைப் புத்தகம் இருந்தது. உடல் வியர்த்திருந்ததால் சட்டை அவர் உடலோடு ஒட்டியிருந்தது. அப்போது அவன் அவர் உடம்பில் கண்ட ஒன்று அவனைத் திகைப்படையச் செய்தது! வியர்வையில் சட்டை நனைந்துவிட்டபடியால் அவர் உடலிலிருந்த பூணூல் நன்றாக வெளியே தெரிந்தது! அவன் ஆச்சரியத்தால் திகைத்தான்! 'பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே' என்ற வரிகள் மற்றுமோர்முறை அவன் எண்ணத்தில் தோன்றி ஒலித்தது!

பெண்ணே! கணவன் உன்னைக் காதலிப்பதை விட நீ அவனைக் காதலிப்பது அதிகமாக இருக்கட்டும்; அப்பொழுதே நீ அவனுடைய இதயபீடத்தில் அமர முடியும்.

இதற்குள் கூட்டம் கலைந்தது. அவனும் குழப்பத்தோடு கலைந்து சென்றான். கூட்டம் முடிந்துவிட்டதன் அறிகுறியாக ஒருவர் மேடையில்,

**சாதிகள் இல்லையடி பாப்பா!-குலத்**
**தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்;**
**நீதி உயர்ந்த மதி, கல்வி—அன்பு**
**நிறைய உடையவர்கள் மேலோர்**

என்ற பாட்டைப் பாடினார்!

அவனுக்குப் பேசியவரின் தோற்றம் குழப்பத்தைக் கொடுத்தாலும், அவன் பெற்ற செவி விருந்து மட்டும் அவனுக்கு நிறைய விளக்கமளித்தது. விளக்கமளித்து என்ன பயன்? 'கற்றார் பெரியோர்; கல்லாதோர் இழிகுலத்தார்! என்ற இருவகைச் சாதியின் வரையறையை அவன் எத்தனையோ முறை கேள்விப்பட்டிருக்கிறான். ஆனால் அவனது இது நாள் வரை அனுபவம் அவையெல்லாம் ஏட்டுச் சுரைக்காய் என்ற முடிவையே கொடுத்தது. காரணம் அவனும் தான் பிறந்தது முதல் சமுதாயத்தால் தீண்டப்படாதவனாக—தாழ்த்தப்பட்டவனாக ஒதுக்கிவைக்கப்பட்டிருப்பவன். அன்றைய கடமைகளை முன்னமேயே முடித்திருந்தபடியால், குழம்பிய உள்ளத்துடன தன் நடமாடும் குடிசையை நோக்கி நடந்தான்.

மாலை திரும்பவும் வேலைக்குப் புறப்பட்டு வருகையில் அவனது நான்கு வயது மகன் "அப்பா! தித்திப்புன்னா எப்படியிருக்கும்? நாம் குடிக்கிற கஞ்சியாட்டம் இருக்குமா? எனக்குத் தித்திப்புப் பணியாரம் வேணும்பா'' என்றழுதான். தன்னிடம் இரண்டணா இருக்கிறது என்ற நம்பிக்கையில் இரவு வாங்கிவருவதாகக் கூறிவிட்டு நடந்தான்.

மாலை வேலையை முடித்துவிட்டு வீட்டுக்குச் சென்றுகொண்டிருக்கும்போதுதான் அவனுக்குத் தன் மகன் கேட்ட தித்திப்புப் பலகாரம் ஞாபகத்திற்கு வந்தது. மடியில் கையைவிட்டான். ஒரே ஒரு இரண்டணா நாணயம் இருந்தது. நாணயத்தைக் கையிலெடுத்துக் கொண்டு அருகிலிருந்த ஒரு கடைக்குச் சென்றான். அக்கடையின் முன் பெரிய பெரிய-கார்கள் நின்றுகொண்டதிலிருந்து பெரிய கடைபோலிருக்கிறது என்று நினைத்துக்கொண்டான். கண்ணாடி

பீரோவிலிருந்த — அவனுக்குப் பெயர் தெரியாத பலகாரங்களைப் பார்த்து ஏங்கியபடிநின்றுகொண்டிருந்தான். எவ்வளவு நேரம் நின்றுகொண்டிருந்தானோ அவனுக்கே தெரியாது; கடைசியில் அக்கடையின் சிப்பந்தி வந்து விரட்டும் வரையில் நின்றுகொண்டிருந்தான்.

பின் ஒரு சிறிய கடையின் முன் சென்று நின்றான். உள்ளேயிருந்து வந்த ஐயர் 'என்ன வேண்டும்?' என்று வெறுப்போடு கேட்டார். தன் கையிலிருந்த இரண்டணாவை அவர் கைமுன் கொடுக்கப்போய் 'அதுவேண்டும்' என்று தட்டிலிருந்த பெயர் தெரியாத ஒன்றைச் சுட்டிக்காட்டினான். அவன் காசைக் கொடுக்கும் முறையைக் கண்ட ஐயர் அவனை ஒரு பார்வையால் விரட்டிக் கீழே வைக்கும்படி கூறினார். பின் அவன் கேட்ட தித்திப்புப் பலகாரத்தை எடுத்து வந்து அவன் மடியில் தூக்கிப்போட்டார்.

இதுபோன்ற எத்தனையோ வெறுப்புக்களையும், திட்டுகளையும் கேட்டுப்பழகியதால் அவன் முகம் எந்தவித மாற்றத்தையும் காட்டவில்லை. எப்படியோ தான் விரும்பியவாறு இரண்டணாவுக்கு இனிப்பு வாங்கிக்கொண்டுபோய்த் தன் மகனுக்கு கொடுக்க முடிந்ததே என எண்ணி மகிழ்ச்சியடைந்தான். மகிழ்ச்சி அவனைக் கொஞ்சம் உல்லாசமாக நடக்கச் செய்தது.

கண்ணைக் கவரும் ஒளியுடன் இரவின் இருளைப்போக்கிக்கொண்டிருந்த கடைகளை வேடிக்கை பார்த்துக்கொண்டே சென்றான். வரவரக் கூட்டம் மிகுந்து காணப்பட்டது. திடீரென்று அவனையுமறியாமல் அவன் மீது யாரோ மோதினாற்போல் தோன்றியது அவனுக்கு. அடுத்து ஒரு வினாடிக்குள்...! அவனுக்குப் பின்னாலிருந்து 'ஏய், கழுதை! நில்லுடா!' என்ற அதட்டல் ஒன்று வந்தது. தெருவில் போகும் வேறு யாரை அவ்வாறுகூப்பிட்டிருக்கமுடியும்? எனவே பயந்து நடுங்கியவனாய் திரும்பிப்பார்த்தான். யாரோ ஒரு பக்தர் — தன் மினுமினுப்பான உடலில் திருநீறு துலங்க உருத்திராட்சக் கொட்டையும் சரிகை அங்கவஸ்திரமும்அணிந்தவராகக் காட்சியளித்தார். அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. அத்துணையளவு சீற்றம் கொண்டவரானார். நடுக்கத்துடன் அவரருகே சென்று எட்டி நின்றான்.

அவன் அவரருகே சென்றானோ இல்லையோ, பலமிக்க அறையொன்று அவன் கன்னத்தில் விழுந்தது. அந்த அறைந்த கைக்குச் சொந்தமானவர் பேசினார். "டேய்! உங்களுக்கெல்லாம் யாருடா இந்த அளவுக்குச் சொல்லிக் கொடுத்தது? உங்களையெல்லாம் இந்த ரோட்டில் நடக்க விட்டதே தப்பு. அதோடு மேலே இடித்துவிட்டு நடக்கிறஅளவுக்கு வந்துட்டீங்களே" என்றார். அவர் முன் அவன் மருண்டு நின்றான். அறைபட்ட இடத்தை அவன்கை தடவிக்கொண்டிருந்தது. அவர் அறைந்தவேகத்தில் அவன் தன் ஆசை மகனின் ஆசையைப் பூர்த்திசெய்ய வாங்கிவைத்திருந்த இனிப்புப் பண்டம் கை நழுவிக் கீழே விழுந்தது. அவன் கண்கள் பொலபொலவென கண்ணீரை உகுத்துக்கொண்டிருந்தன. உடலெல்லாம் நடுங்கத் தலைகுனிந்து நின்றான்.

பக்திமான் தொடர்ந்து பேசினார்: "சிவ, சிவ! கெட்ட காலம் வந்துவிட்டது. ஒன்று இந்த உலகத்தையே ஒரு பிரளயம் வந்து அடித்துக்கொண்டு போக வேண்டும்; இல்லையானால் உலகம் இன்னும் முழுவதும் கெட்டுப் போவதற்கு முன்னால் நாம் நல்ல சாவு வந்து செத்துவிட வேண்டும். சே! தீண்டத் தகாத பசங்களெல்லாம் துணிந்து ரோட்டில் நடக்கிறான்களே! நான் கூட வந்த ஆத்திரத்தில் உன்னைத் தொட்டல்லவா அடித்து விட்டேன். சிவ சிவ! என்னபாபம்! இதை எப்படிப் போக்கிக்கொள்வதோ தெரியவில்லை. நல்லவேளை கோயிலுக்குப் போய்வந்தபின் இந்தப் பாபியைத் தொட்டுக்கொள்ள வேண்டிவந்தது. எம்பெருமான் அருளே அருள். அவரைத் தரிசிக்குமுன் இது நடந்திருந்தால் என்ன ஆவது? டேய்! உங்களுக்கெல்லாம் எவ்வளவு திமிர்? சீ! இன்னும் என் முன்னால் நிற்க உனக்கு எவ்வளவு தைரியம்? ஏதாவது பதில் பேசுறானா பார்! போடா அப்பாலே!"

இதற்குள் அங்கே ஒரு கூட்டமே கூடிவிட்டது. அவன் தலைகுனிந்து கண்ணீர் விட்டபடி இருந்தான். கூட்டத்தில் இருந்த ஒருவர் — கோயில் குருக்கள், பக்திமானைத் தேற்றினார். "என்ன தைரியமடா உனக்கு? பக்திமான் பட்டுசாமிப் பிள்ளை என்றால் இந்த ஊரே நடுநடுங்கும்! நீ என்ன என்றால் அவர் முன் துணிந்து நடந்து சென்றதோடு, அவர் உடல் உன் மீது படும்படியாக வேறு நடந்து போயிருக்கியே?...உம்... உங்களையெல்லாம் சொல்லிக் குற்றமில்லை ...பிள்ளைவாள் இதற்காக வருத்தப்படாதீங்கோ, வருகிற சனிக்கிழமை பிரம்மானந்தமா ஒரு லட்சார்ச்சனை ஒன்னு செஞ்சு இந்தப் பாபத்தைப் போக்கிடலாம்" என்று பிள்ளையைத் தேற்றி அவரைத் தொடாமலேயே அழைத்துச் சென்றார்!

அவனுக்காக அனுதாபப்படும் சிலரும், அந்த இருவரோடு சேர்ந்துகொண்டு திட்டிய சிலருமாக இருந்த கூட்டம் கலைந்தது. அவனுக்கு அதற்கு மேலும் அழுவதற்கு கண்ணீர் இல்லை. நின்ற இடம் கண்ணீரால் நனைந்தது. கூட்டம் கலைந்துவிட்டபடியால் தலையைத் தூக்கி தூரத்தே பார்த்தான். ஐயரும் பிள்ளையும் தொலைவில் நடந்து சென்றுகொண்டிருந்தனர். ஐயர் கூடுமான வரையில் பிள்ளையைத் தொடாமல் விலகியே சென்றுகொண்டிருந்தார்.

அவனுக்கு அனுதாபம்சொல்ல அங்கு யாரும் இல்லை. அவன் கையினின்றும் நழுவி விழுந்திருந்த இனிப்புப் பண்டத்தை ஒரு நாய் சுவைத்துக் கொண்டிருந்தது.

வெறுங்கையோடு ஏதோ எண்ணியவனாய் குடிசை நோக்கி நடந்தான். அங்கு அவன் மகன் 'அப்பா தித்திப்புப் பணியாரம்!' என்று வாய் குழறியபடி தூங்கிக் கொண்டிருந்தான்.

படுத்த அவனுக்கு தூக்கமே வரவில்லை. எத்தனையோ நாட்கள் வெறும் வயிற்றோடெல்லாம் படுத்து நன்றாகத் தூங்கியிருக்கிறான். ஆனால் அன்று உறங்காமல் எதை எதையோ சிந்தித்துக்கொண்டிருந்தான். "தீண்டாதவன்" என்று அவன் வாய் முணு முணுத்தது. 'ஏன் தீண்டாதவன்?' என்று மற்றொரு வினாவையும் அவன் நெஞ்சம் எழுப்பியது. அதற்குப் பதில்

(11-ம் பக்கம் பார்க்க)

# இரண்டுமே தொல்லை!

( கா. வேழவேந்தன் )

"இனிமை! எழிலே உருவெடுத்து வந்த ஏந்திழையே! துயர்மண்டிய நிலையில் ஏன் காணப்படுகிறாய்? தென்பாண்டி நாட்டிலே வாழ்பவர்க்குக் குறை என்பதும் உண்டோ?"

"கிள்ளை! மீட்டும் மீட்டும் என்னை ஏதேதோ கேட்டுத் தொல்லை கொடுக்கவேண்டாம். தனியே என்னை விட்டுச்செல். அது போதும் எனக்கு!"

"வளமார் வைகையிலே புதுப் புனல் பெருக்கெடுத்தால் நீதானே எல்லையற்ற மகிழ்வுடன் ஓடி வருவாய்; நீரிலே மூழ்கி மூழ்கி எழுந்து நெஞ்சமெல்லாம் உவகை கொள்வாயே! எனவேதான் உன்னை அழைக்க வந்தேன். பொதியின் வையை பூரிப்புடன் பெருகிவரும் காட்சியை வந்து பார். பிறகு..."

"ஒன்றும் வேண்டாமடி. நான் நீராடுவதற்கு வருவதாக இல்லை; இனி எப்போதும் வரப்போவதும் இல்லை!"

"ஏன் வெள்ளத்தைக் கண்டு அஞ்சி நடுங்குகின்றாயா? வெற்றி நிறை வேப்பந்தார் சூடிய பாண்டியன் மாறனின் நாட்டிலே நீ வாழுவதற்கே தகுதி யில்லையடி!"

"போதுமடி! பொல்லாத உண்மையைக் கண்டுபிடித்துவிட்டாய். அச்சம் என்பது தென்பாண்டியிலே மடிந்து ஆண்டுகள் பலவாகின்றனவே! குமரியாட வருதற்கு என்னால் இயலாது!"

"ஏன் இனிமை? ஏதேனும் உடற்காய்ச்சலா? இதை ஏன் எனக்கு முன்பே உரைக்கவில்லை? மருத்துவர் வந்தாரா? மருந்து கொடுத்தாரா?"

"இல்லை, அடுக்கிய கேள்விகள் போதுமடி! உடற்காய்ச்சலுமில்லை, ஒன்றுமில்லை! என்னால் வையைக்கு வர விருப்பம் இல்லை. அவ்வளவுதான்."

"ஏனிந்த மாற்றம்? வளங்கொழிக்கும் வையைப் பேராறு நேற்றுவரை உனக்கு அளவிறந்த உவகையை அள்ளி அள்ளித் தந்தது; இன்றோ அதே வையை உனக்கு நஞ்சாகத் தோற்றமளிக்கிறதா? நீ உண்மையிலேயே விந்தைக்குரிய பிறவிதான்!"

"ஆராய்ச்சி முடிந்ததா? அல்லது......"

"பின் என்ன, இனிமை? புனலாட வா என்று பூரிப்புடன் அழைக்கிறேன் நான்; நீயோ அனல் கக்கும் முகங்காட்டி அப்புறம் போ என்கிறாயே! புரியாத புதிராக ஏன் மாறிவருகிறாய்?"

"சினம் கொள்ள வேண்டாம், கிள்ளை! உன்னிடம் சொல்வதில் என்ன இருக்கிறது! சொல்கிறேன் கேள். வையைக்கு வந்து நான் நீராடுதல் என் செவிலித்தாய்க்குப் பிடிக்கவில்லை; ஐயக் கண்களோடு நோக்குகிறார்கள்."

"சுழித்தோடும் வைகைப் பேராற்றில் நான் துளைந்து துளைந்து நீராடுவேன், அதனிடம் வாழுகின்ற கயல்களைக் காட்டிலும் துள்ளித்துள்ளி மகிழ்வேன். அதனால் என் விழிகள் அந்திவான் போன்று சிவந்துவிடும். இதைக் கண்டு என் செவிலித்தாயர், இவள் பாண்டியன் மாறன் மீது எவ்வளவு காதல் கொண்டிருக்கிறாள்? அதனால் அல்லவா அவனுடைய வையைப் புனலில் மூழ்கி மூழ்கி எழுகிறாள்!' என்று ஏசுவார்கள்; எள்ளுவார்கள்"

"அப்படியா?"

"அதோடு மட்டுமா? அப்படியே என்னை இளவயது முதல் கற்பத்திலே ஆழ்த்திய வையையை மறந்து அதன் பக்கமே செல்லவில்லை என்று வைத்துக்கொள். அப்பொழுதும் தொல்லை வந்து சேருகிறதடி!"

"எப்படி...?"

"அந்த நிலையிலும் என் செவிலித்தாயர்கள், 'இவள் வையைப் புனலின் பக்கமே செல்வதில்லை; ஏன் தெரியுமா? இவள் வையைக் கோமான் மீனவனின்மேல் வைத்துள்ள எல்லையற்ற காதல் எங்கே வெளிப்பட்டுவிடுமோ என்று அஞ்சுகிறாள். ஆகவேதான் பூநாறும் நீர் கொணரும் வையையை ஏறெடுத்தும் பாராதவள்போல் நடிக்கிறாள்!' என்று ஏசுதல் கணைகளை ஏவுகிறார்கள். இப்பொழுது சொல்! வாழ்வு பெருக்கும் வையை எனக்கு மட்டும் தீங்கு செய்கிறது. அதிலே நீராடினாலும் குற்றம்! ஆடாவிடினும் குற்றம்! அடுக்குமா இது?"

இனிமையின் இந்தப் பதில் கிள்ளையின் வாயினை அடைத்துவிடுகிறது.

இந்த விந்தைமிகும் செய்தியைக் கூறுபவள் 'முத்தொள்ளாயிர'த் தலைவி:

அந்தப் பாடல் இது:

ஏற்பக் குடைந்தாடில் ஏசுவர்; அல்லாக்கால்
மாறியிருந்தாள் எனவுரைப்பர்-வேற்கண்ணாய்
கொல்யானை மாறன் குளிர்புனல் வையைநீர்
எல்லாம் எனக்கோர் இடர்!

★

ஆடவன், வாழ்க்கையை சீக்கிரம் புரிந்துகொண்டு விடுகிறான்; பெண் வாழ்க்கையைக்காலந்தாழ்ந்துப் புரிந்து கொள்கிறாள். ஆணுக்கும் பெண்ணுக்குமுள்ள வேறுபாடு இதுதான்.

# “தாமஸ் மசாரிக்”

தொ. து. அன்புச் செழியன்

“ஸ்லோவக் பிரிவைச் சார்ந்த ஜோசப் மசாரிக்கும் ‘செக்’ வகுப்பைச் சேர்ந்த தெரேசா என்பவருக்கும் 1,850 ஆண்டு மார்ச்சு மாதம் 7-ம் நாள் பேசும் பொற்சித்திரமாகப் பிறந்தார் “தாமஸ் மசாரிக்.”

செக்கோஸ்லேவிக்கியா விடுதலைக்கும் மொழி வளர்ச்சிக்கும் பாடுபட்டவர்தான் தாமஸ் மசாரிக்.

மசாரிக்கின் தந்தையோ ஒரு வண்டியோட்டி. தாயாரோ சீமான் வீட்டு வேலைக்காரி. அவர்களின் செல்வக்குமாரன் படித்துப் பட்டம் பெற்று படோடோபமாக வாழ முடியுமா?

மசாரிக்கை ஏதாவது ஒரு வேலையில் அப்போதே பழக்கி வைத்து அவரின் எதிர்கால வாழ்க்கைக்கு வழி:தேட முயன்றார் அவருடைய தந்தை.

தாய் எந்த அளவு கஷ்டப்பட்டாகிலும் தன் மகனைக் கொஞ்சம் படிக்க வைத்துவிட வேண்டும் என்று எண்ணினார்கள். “ஹஸ்டோபக்” என்ற ஊரில் இருந்த நடுத்தரப் பள்ளியில் சேர்த்தார்கள். அவன் 13-வது வயதில். அந்த நடுத்தரப் பள்ளியின் படிப்பை முடித்தான்.

பின் மூன்றுவருடம் “வியன்னு” நகரில் பூட்டுத் தயாரிக்கும் கம்பெனியிலும் உள்ளூரில் இருந்த கொல்லுலையிலும் வேலை பார்த்தார்.

பதினாறுவது வயதில் ‘வியன்னு’ நகரில் கல்லூரி மாணவராகச் சேர்ந்து படித்தார். அப்போது அவரின் ஏழ்மை நிலையை உணர்ந்த ஒரு ஆசிரியரின் உதவியால் “லட்விக்” என்னும் ஊரில் உள்ள பள்ளியிலே துணை ஆசிரியர் வேலையில் அமர்ந்தார். அப்போது மசாரிக் மாணவர்களுக்கு பாடம் கற்றுக்கொடுத்தார். அத்துடன் தானும் கல்லூரியில் மாணவராகிப் பாடம் பயின்றார்.

அந்த நிலையிலும் மாதா கோவிலின் முன் பாத்திரங்களை ஏந்தி காசுகளைச் சேர்ப்பதுமாக இருந்தார். இதற்கு லத்தீன் மொழியை முறையாக உச்சரிக்க தெரியாது. எனவே லத்தின் மொழியை ஆசிரியர் ஒருவர் மூலம் கற்றுத் தேற வாய்ப்பு, வசதி இல்லாத காரணத்தால், அந்த மாதா கோவிலில் இருந்த லத்தின் அகராதி ஒன்றை எடுத்து “ஏகலைவன்” முறையில் பயின்றார். அதனால் 1865-ம் ஆண்டு தேர்வின் மூலம் லத்தின் மொழி அறிஞர் ஆனார்.

பின்னர் புரூனே நகரின் ஜெர்மானிய லத்தின் மொழி கலாசாலையில் சேர்ந்தார். இங்கே தன் ஓய்வு நேரத்தை ஒரு போலீசு அதிகாரியின் வீட்டுப் பிள்ளைகளுக்குப் பாடம் கற்றுக் கொடுப்பதில் கழித்தார். அத்துடன் அவ்வதிகாரியின் நல்லதொரு நண்பருமானார்.

ஆஸ்திரிய - அங்கேரிய அரசியலில் சிக்குண்டு - பொக்கிமியா - ஸ்லோவாக்கியா என்ற பெயர்களுடன் செக் நாடு 12-ம் நூற்றாண்டுகள் வரை (கி. பி. 5 முதல் 17 - வரை) இருந்தது. பொக்கிமியா மக்களின் ஏமாந்த தன்மையாலும், அப்பாவித்தனத்தாலும் பன்னிரண்டாம் நூற்றாண்டு முதல் ஜெர்மனியர் பொகிமீயாவிற்குள் புகுந்துவிட்டனர்.

பிறகென்ன? — ஆதிக்கம் — அவர்களுடையதாயிற்று. வீழ்ந்துப்பட்டனர் பொக்கிமிய மக்கள். ஏற்றம் கொண்ட ஜெர்மனியர் பொக்கிமியாவின் கலாச்சாரத்தையும், மொழியையும் நாகரீகத்தையும் பழித்தனர்--இகழ்ந்தனர்.

பொகிமீயாவிலும் - செக் நாட்டிலும் வாழ்ந்த பிரபுக்களும்-சீமான்களும் ஜெர்மனியரின் பழக்க வழக்கங்களை கையாளுவதால் தங்களுக்கு ஒரு புதுத் தகுதி கிடைப்பதாகக் கருதி நடந்தனர்—மகிழ்ந்தனர்.

என்றாலும் தன் மானமும் இன உணர்வும் விழிப்புணர்ச்சியும் கொண்ட ஒரு சிலரால் “ஜான் ஹஸ்” தலைமையில் சீர்திருத்த இயக்கம் ஒன்று கண்டு 13-வது நூற்றாண்டிலேயே போராட்டந்தான் செய்தார்கள்.

இந்த இயக்கத்தவர் ஜெர்மனியரின் சூது:மதியையும் மத சட்டங்களையும் கண்டித்து எழுதியும் பேசியும் வந்தனர்.

பலன் கைமேல் கண்டனர். 1415-ம் ஆண்டு ஜூலை மாதம் 16-ம் தேதி ஜான்ஹஸின் மேல் வழக்குத் தொடர்ந்து, மத குருத்தலைவரான போப்பாண்டவர் ரோம் நகரில் ஜான்ஹஸை உயிருடன் சுட்டுப்பொசுக்கத்தீர்ப்புக்கூறினர். கூறியவர் மதகுருவாயிற்றே! அவர் தீர்ப்பை உடனே நிறை

வேற்றி உள்ளம் மகிழ்ந்தனர் மதவாதிகள்.

அவ்வளவுதான்! எப்படியோ இதுவரை இல்லாத இன உணர்ச்சி செக் மக்களிடையே வளரத்தொடங்கிப் பெருங்கிளர்ச்சி நாடெங்கும் உண்டாயிற்று.

இதனால் இப்புரட்சியைத் தூற்றித் திரிந்தவனும், கத்தோலிக்க மதத்தைச்சார்ந்தவனுமான 2வது "பெர்னண்டு" 1619ல் பொக்கிமியாவின் மன்னனாக வந்ததும் மக்களுக்கும் அவனுக்கும் மாபெரும் போராட்டம் அடுத்த ஆண்டே நடைபெற்றது. முடிவில் பெர்னண்டுக்கு வெற்றி. தோல்வி கண்ட செக் இனத்தவர்கள் கிட்டத்தட்ட 300 ஆண்டுகள் வரை இருக்கும் இடமே தெரியாத அளவுக்குப் பாதிக்கப்பட்டு விட்டார்கள்.

இதையெல்லாம் புருனே கலாசாலையில் இருந்துகொண்டே வரலாற்றில் கவனித்துவந்த மசாரிக், தான் செக் மண்ணிலே தவழ்ந்தது முதல் தேன் எனத் தனக்கு இனித்துக்கொண்டே வரும் தாய்மொழி, கலாசாரம் முதல் நாடு முழுவதும் நலிந்துவிட்டதையும் இதற்குக் காரணமான ஜெர்மனியரின் அட்டகாசமும் அவர்களின் மதத் தலைவர்களின் கோரிக்கை கலந்த விளையாட்டுகளையும் கண்டு கேட்டு, துடிதுடித்தார். எதிர்த்துப் போராடத் தலைப்பட்டார்.

முடிவு அவரை, அவர்படித்துக்கொண்டு இருக்கும் கல்லூரியிலேயே தலைவர் முன் குற்றவாளியாக நிற்கவைத்தது.

அவர் செய்த குற்றம் என்ன?

பாவ மன்னிப்புப் பெறக் குருமார்களிடம் போவதை நிறுத்திக் கொண்டார். அத்துடன் தன் எல்லா வேலைகளையும் செக் மொழிப்படி வகுத்து அதன்படி நடந்தார்.

மன்னிப்புக் கேட்டுக்கொண்டு இனி ஒழுங்காக நட என்றார் தலைவர்.

தன் சுயமரியாதைக் கொள்கைகளை அந்தத் தலைவருக்கு விளக்கினார் மசாரிக்.

ஆத்திரம் கொண்ட தலைவர் மசாரிக்கை அடித்து விரட்ட அடியாட்களை ஏவினார்; மசாரிக் அவர்களிடம் சிக்காமல் கல்லூரியைவிட்டு வெளியேறினார். பசியுடன் தெருத் தெருவாக அலைந்தார். வேலை தேடினார்; கிடைக்கவில்லை. கடைசியில் தன்நண்பரான போலிஸ் அதிகாரியிடம் சென்றார். மேல் படிப்புக்காக 'வியன்னா' செல்லும் தன் மகனோடு மசாரிக்கையும் அனுப்பிவைத்து' அவரையும் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படிக்க வசதி செய்து கொடுத்தார்.

இங்கேதான் தன் இன மக்களின் முன்னேற்றத்திற்காக, உணர்ச்சியை தட்டி எழுப்பும் விதத்தில் "விளாட்டிஸ்" என்ற புனைபெயரில் கட்டுரைகள் எழுதி வந்தார். இவரின் இந்த நடவடிக்கையைத் தெரிந்துகொண்டதின் காரணமாக அவருடைய படிப்பு முடிவு பெற்றும், பட்டம் வழங்க விருப்பமில்லாமல் இருந்தனர் கல்லூரி நிர்வாகிகள்.

எப்படியோ 1867-ல் அவர்கள் கொடுத்த 'டாக்டர்'' என்ற பட்டத்தோடு வெளிவந்தார்.

லீப்சிக் நகரம் சென்ற அந்த போலிஸ் அதிகாரியின் மகனுடனே தானும் சென்று அங்கே வேலை தேடத் துவங்கினார்.

இவருடைய நடத்தையைக் கவனித்துக்கொண்டு வந்த, அவர் தங்கியிருந்த விடுதியின் சொந்தக்காரி அன்பு பாராட்டினாள். அவரின் வாழ்க்கை முன்னேற்றத்தில் பெரும் பொறுப்பேற்றாள். ஒரு நாள், அமெரிக்காவில் இருந்து தன் வீட்டுக்கு விருந்தாளியாக வந்திருந்தவளுக்கு மசாரிக்கை அறிமுகப்படுத்தினாள்.

துடிக்கும் இளமையால் தன்னை அலங்கரித்துக்கொண்டு இருக்கும் அவளின் அங்கங்களைப் பார்ப்பவர்கள் "அற்புதத்திலும் அற்புதம்" என்று கூறும் அளவுக்கு வசீகரமாக விளங்கும் ஒரு பெண் கையை நீட்டினாள். மசாரிக்கோ பேசும் அவளுடைய விழிகளைப் பார்த்துக் கொண்டே கரத்தோடு கரம் சேர்த்தார். இப்போது அவளின் கண்களும் அவரைப் பார்த்தன.

சில நாட்கள் வசந்த காலத் தென்றலில் வானம் பாடிகளாக காதல் வானத்தில் பறந்தனர். இன்பம் கொள்ளை! கொள்ளை!!

"மீண்டும் கூடுவோம்" என்ற உறுதியை மசாரிக்குத் தந்துவிட்டு வழியும் கண்ணீரோடு விடைபெற்றுச் சென்றாள், அமெரிக்காவிற்கு.

மசாரிக்கை அமெரிக்காவிற்கு வரவழைத்துத் தன் தாய் தந்தையர்களின் சம்மதத்தோடு தங்கள் திருமணத்தை முடித்துக்கொண்டாள். 'காரிக்'' அதுதான். அவள் பெயர்.

திருமணம் முடிந்ததும் தம்பதிகள் "வியன்னா" திரும்பினர். 1829ம் ஆண்டு வியன்னா சர்வ கலாசாலையில் தத்துவப் பேராசிரியராகச் சேர்ந்தார். பலரும் வியந்து பாராட்டும் அளவுக்கு மசாரிக்-காரிக் தம்பதிகள் வாழ்ந்து காட்டினர். மூன்றாண்டுகளுக்குப் பிறகு செக் இனத்தவர்களுக்கென்றே ஏற்பட்ட பிரேக் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பதவி ஏற்று அங்கே பயிலும் மாணவர்களுக்கு அக்கறையுடன் பயிற்சி தந்து செக் இன உணர்வுக்கு வித்திட்டார். தோழமை கொண்டாடினர். மாணவர்களும் இவரிடம் மிகவும் மரியாதையோடு நடந்துகொண்டனர்.

1890ம் ஆண்டு செக் மக்களின் பெருமித ஆதரவோடு ஆஸ்திரிய பாராளுமன்ற உறுப்பினராக அமர்ந்தார்.

## 1, 2, 3....?

மூன்றாவது ஐந்தாண்டு திட்ட கால முடிவுக்குள் குறைந்த பட்சம் 6-11 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்காவது கட்டாய இலவசக் கல்வியளிப்பது அவசியம்.

இவ்வாறு புதுடில்லியில் 12-ம் தேதி நடந்த அகில இந்திய ஆரம்பக்கல்விகவுன்சில் சர்க்காருக்கு சிபாரிசு செய்திருக்கிறது.

நாதியற்றவர்கள், நடைபாதையிலே குடும்பம் நடத்துவோர். பஞ்சைகள் பசியாலே மடியும் பரிதாபத்திற்குரியவர்கள் போன்ற தளர்ந்துபோன செக் இன மக்களுக்காகப் பாராளுமன்றத்திலே போராடினார்.

குன்றின் மேல் இட்ட தீபம் போல் அவர் புகழ் எங்கும் பரவிற்று.

இதே நேரத்தில் உலகப்போர் தொடங்கியது. செர்பியாவை ஆஸ்திரியா ஆக்ரமிக்க யுத்தம் தொடுத்தது. மசாரிக் யோசித்தார், யோசித்தார். செக்நாட்டு விடுதலை, புரட்சி செய்துதான் பெறமுடியுமெனக் கண்டார். புரட்சிக்காரரானார்.

டாக்டர் கிராமர்—ஸ்டிபானிக்—பினேஸ் மசாரிக் ஆக எல்லாத் தலைவர்களும் ஒன்று கூடி "மாவியா" என்ற பெயரில் செக் விடுதலைக்குப் பாடுபடும் சங்கம் ஒன்று ஏற்படுத்தினர். செயல் முறைத் திட்டங்கள் பல வகுத்தனர்.

அதன்படி மசாரிக் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்று இந்த விடுதலைப் படைக்காக—ஆக்கமும் ஊக்கமும் ஒத்துழைப்பும் பொருளுதவியும் வேற்றுநாட்டவர்களிடமும் அங்கு குடியேறியுள்ள 'செக்' மக்களிடமும் பெறுவதற்காகத் தன் அன்பு மனைவியையும் தன் ஐந்து குழந்தைகளையும் விட்டு விட்டு 64 வயதில் ஜெர்மனிய நடிகனைப் போல் 1914ம் ஆண்டு 17ம் நாளன்று ஆஸ்திரியாவை விட்டு வெளியேறினார்.

"தாம் மேற்கொண்டுள்ள பணி மிகவும் புனிதமானது; உடனடியாகவும் நடைபெறவேண்டியதுமானது என்று தெரிந்துகொண்டு தன்னாட்டின் உரிமைக் குரல் எழுப்ப முதலில் இத்தாலி சென்றார். ஜினிவா சுவிட்சர்லாந்து இப்படிப் பல இடங்களுக்கு ஓய்வு பெறாமலேயே ஊர் ஊராகச் சென்று ஆக்கம் தேடினார். சிறிது காலம் இலண்டன் கல்லூரி ஒன்றில் பேராசிரியராக வேலை பார்த்தார், அதனால் பிரிட்டிஷ் நண்பர்களால் தனக்குக் கிடைத்த ஒத்துழைப்பால் ரஷ்யா சென்றார். பூத்து மலர்ந்த பொது உடைமைப் பூங்காவின் காவலர் ஸ்டாலினின் மாபெரும் உதவியால் அங்கு தோற்றுவிக்கப்பட்ட செக் விடுதலைப் படையைத் தன் நாடு கொண்டு செல்ல அனுமதி பெற்று அதற்கு வேண்டிய தலைவரை நியமித்துவிட்டு எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை அவர்களுக்கு விளக்கிவிட்டு டோக்கியோ சென்றார்.

செக்நாட்டு விடுதலைக்கான விளக்கங்களைத் தன் நேசநாட்டினருக்கும் அமெரிக்கஜனாதிபதி "வில்சனுக்கும்" விளக்கினார். இதைக் கண்டுவிட்ட "ஆஸ்திரிய எஜமானர்கள் தங்களால் முடிந்தமட்டும் "செக் நாட்டு" விடுதலைக்கு ஒத்துழைப்புத் தராமல் இருக்கும்வகையில் முயற்சி செய்து பார்த்தனர். மாவீரன் மசாரிக்கின் சாதனையால் செக்கஸ்லோவேக்கியா உடனடியாகச் சுதந்திர நாடாக்கப்பட வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி வில்சன் அறிக்கை ஒன்று தயாரித்து வெளியிட்டார். ஆஸ்திரியப் பிடியில் இருந்து "செக்" "ஸ்லோவக்" நாடுகள் பிரிந்து தனி நாடாக அவசியம் தோன்றவேண்டும் எனப் பிரெஞ்சு சர்க்காரும் பிரகடனம் ஒன்று வெளியிட்டனர்.

செக்நாடு, சுதந்திரத் தனிநாடு என விளங்கிற்று. 1918-ம் ஆண்டு நவம்பர் மாதம் தாமஸ் மசாரிக் செக் நாட்டின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கடைசியாக வில்சனைச் சந்தித்து நன்றி தெரிவித்துவிட்டு இலண்டன்வந்து அங்கு தங்களுக்கு உதவிகள் பல செய்தவர்களுக்கும், பிரான்சு சென்று அங்கே தன் நாட்டு விடுதலைக்கு ஆதரவு கொடுத்தவர்களுக்கும் நன்றி சொல்லிக் கொண்டு, நடிகனைப்போல் மாறுவேடம் கொண்டு சென்ற மசாரிக் செக் நாட்டின் ஜனாதிபதியாக டிசம்பர் மாதம் பூரிப்பும் பெருமிதமும் கொப்பளிக்க, தன் சுதந்திர நாட்டிற்கு வந்து சேர்ந்தார். "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை" எனத் தன் நாட்டை சீர்படுத்தி 1918-ம் ஆண்டு முதல் 1935-ம் ஆண்டு வரை அந்த நாட்டின் ஜனாதிபதியாக விளங்கினார்.

செக்கோஸ்லவேக்கியா நாட்டின் நல்வாழ்வே தன் வாழ்வு என நினைத்துப் பாடுபட்ட தாமஸ் மசாரிக் தன் 87-வது வயதில் 1937-ம் ஆண்டு மறைந்தார் — வாழ்க அவர் புகழ்.

★

7-ம் பக்கத் தொடர்ச்சி

அவனிடமிருந்து மட்டுமே வரவேண்டியதாயிருந்தால், அவனுள்ளத்தில் அந்த வினாவே எழுந்திருக்காதே! அதற்குப் பதிலளிக்க வேண்டியது வேறு நெஞ்சங்களல்லவா!

திடீரெனக் காலைநடந்த கூட்டம் அவன் எண்ணத்திற்கு வந்தது. பூணூல் போட்டுக் கொண்டே அதை மறைத்து வைத்து 'பார்ப்பானை ஐயரென்ற காலம்போச்சே' என்ற பாரதியார் பாடலின் மேற்கோள் காட்டிச் சாதி ஒழிய வேண்டும் என்று பிரசாரம் செய்த சமூக சேவகர் சடகோபஅய்யர் அவன் மனக்கண் முன்னே தோன்றினார். அடுத்து வெளிப்படையாகவே பூணூலணிந்து பிள்ளைவாளுக்கு வக்காலத்து வாங்கிய கோயில் குருக்கள் அவன் எண்ணத்திற்கு வந்தார். கடைசியில் பூணூல் போடாவிட்டாலும் திருநீறும் உருத்திராட்சமுமாகக் காட்சியளித்து, அவனது இந்த மனப் போராட்டத்துக்கு வித்திட்ட பக்திமான் பட்டுசாமிப் பிள்ளை தோன்றினார்.

அவன் மனம் சிந்தித்துச் சிந்தித்து குழப்பமடைந்தது. 'நான் தீண்டாதவன்' என்று முணுமுணுத்தான். 'தீண்டாதவன், தீண்டாதவன்' என்று எங்கிருந்தெல்லாமோ குரல்கள் வந்து எதிரொலிப்பது போல் தோன்றியது அவனுக்கு. காலையில் கூட்ட முடிவில் 'சாதிகள் இல்லையடி பாப்பா—குலத் தாழ்ச்சி உயர்ச்சியெல்லாம் பாவம்' என்று ஒருவன் பாடியது அவன் மனக் காதில் கேட்டது. உலகத்தில் எல்லோருக்கும் 'சொல்', ஒன்றுதான் இருக்கிறது. 'செயல்' என்பது அறவே இல்லையோ என்று எண்ணினான்! 'சாதிகள் இருக்குதடி பாப்பா' என்றுதான் அப்பழைய பாட்டு இப்போது அவன் காதில் ஒலித்தது!

"சாதிகள் ஒழிய வேண்டியதுதான்; ஆனால், இதனால் எல்லாமா சாதிகள் ஒழிந்துவிடும்" என்று சாதிகள் ஒழிப்பில் முழுப் பங்கேற்றுப் பணியாற்றிய உத்தமர் காந்தியடிகளின் வார்சுகள் என்று தங்களைத் தைரியமாகக் கூறிக்கொள்ளும் காங்கிரசார் ஆட்சிப் பீடத்தில் இருந்துகொண்டு சலசலக்கிறார்களே, அவர்களுக்கு இது தெளிவளிப்பதாக அமையட்டும். ★

# நெய்தல் இயல்பு

(து. இரத்தினவேல்)

அறுவடை முடிந்த வயல் அது. அவ்வயலின் இடை இடையே நெய்தல் செடிகள் வளர்ந்துள் ளன. வளர்ந்த அச்செடிகளில் நிறைய மலர்கள் மலர்ந்து மணம் பரப்பிக்கொண்டிருக்கின்றன. அக் காட்சி கண்கொள்ளாக் காட்சி யாக இருக்கிறது; கவிஞர்களுக்கு விருந்தூட்டும் காட்சியாக அமை கிறது.

இவ்வாறு நெய்தல் மலர்கள் மலர்ந்து எழிலும் மணமும் பெற் றுக்கொண்டிருக்கும் அந்தக் கழனி வழியே உறையூர்ச் சல்லி யன் குமரன் என்ற புலவர் ஒருவர் வந்தார். வந்தவர் கழனியிலே மலர்ந்து மணம் தந்து கொண்டி ருக்கும் மலர்களையும், கண்ணுக் கினியதாய்த் தோன்றும் செடி களையும் கண்டுவிட்டார். கண்டவ ரது கால்கள் மேலே அடி எடுத்து வைக்க மறுத்துவிட்டன. அப்ப டியே கழனிக் கரையிலேயே நின் றார். வைத்த விழி வாங்காமல் நெய்தலின் அழகையே நெடுநேரம் பருகிக்கொண்டிருந்தார்; காற் றோடு கலந்து வந்து கொண்டி ருந்த நெய்தல் மலரின மணத்தை நுகர்ந்து கொண்டிருந்தார். அவ ரது முகமலர் மகிழ்வால் மலர்ந் தது. இதயம் களிப்பால் துள்ளி யது. எவ்வளவு நேரம்தான் அவ் விடத்திலேயே நின்றுகொண் டிருந்தாரோ தெரியாது. ஆனால், அதன் பின்னர் ஒவ்வொரு நாளும் அவ்விடத்திற்கு வந்து அக்காட்சி யைக் கண்டு களிக்காமல் போக அவர் தவறவில்லை.

ஒருநாள் புலவர் வயலுக்கு வந்த வேளையிலே அவரது கலை நெஞ்சம் வாடுகின்ற விதத்திலே, வருந்தித் துயருறுகின்ற விதத் திலே ஒரு நிகழ்ச்சி நடந்துகொண் டிருந்தது.

குமுறும் எரிமலையும் கொந் தளிக்கும் கடலும் கவிஞர் கண்க ளுக்கு விருந்தளிக்கலாம்; இடி யோசை அவர்கள் செவிப் புல னுக்கு இன்பமளிக்கலாம். இர விலே பளிச்சென்று மின்னும் புலியின் கண்களும், சீறி வரும் பாம்பின் நெளிவும்கூட அவர்க ளது கலை நெஞ்சத்தைக் களிப்பி லாழ்த்தலாம். ஆனால், அவற்றால் துன்புறும் மக்களுக்கு அவைகள் எவ்வளவு கோரமாகவும் கொடுமை யாகவும் தெரிகிறது!

வயலில் வளர்ந்துள்ள நெய்தல் செடியும், அச்செடியில் மலர்ந் துள்ள மலர்களும் புல வர் கண்களுக்கு விருந்தளித்தது; அவர்தம் கலை உள்ளத்தைக் களிப்பிலாழ்த்தியது. ஆனால், அந்த வயலைவைத்தே தன் வயிற் றைக் கழுவும் உழவனுக்கோ அந்த நெய்தல் செடி பெரும் பகை யாகவே தோன்றியது. "வெட்டி யாக நெய்தல் வளர்ந்திருக்கும் இடத்திலே நெற் பயிர் நட்டால், அதனால் எவ்வளவு பயன் பெற லாம்" என எண்ணலானான். எண்ணியவன் வயலை உழத் துணிந்தான். அப்படி அவன் உழு கின்ற வேளையிலே புலவர் கண் களுக்கு விருந்தளித்து வந்த நெய் தல் செடிகளையெல்லாம பிடுங்கி அவர் நின்று களித்து வந்த கரை யிலேயே எறிந்தான். இக்காட்சி யைத்தான் புலவர் கண்டார். கண்டவுடன் அவர்தம் கலை உள் ளம் வருந்தியது; வரப்பிலே வாடிக்கிடக்கும் நெய்தலைக் கண்டு அவர் உள்ளமும் வாடியது. துன் பம் தோய்ந்த உள்ளத்தோடு இல் லம் ஏகினார்.

சில திங்களுக்குப் பின்னர் புலவர் அந்த வயல் வழியே வர நேர்ந்தது. தற்செயலாகப் புலவர் தன் பார்வையைக் கழனியிலே சுழலவிட்டார். என்ன வியப்பு! முன்பு போலவே அங்கு நெய்தல் செடிகள் நிறைய வளர்ந்து மணம் மிக்க மலர்களுடன் கவின் பெறக் காட்சி தந்துகொண்டிருந்தன.

இதைக் கண்ட புலவர் வியப்பி லாழ்ந்தார். அந்த வியப்பினூடே ஓர் அரிய உண்மையும் அவருக் குப் புலப்பட்டது. அவர் எண்ணி னார்:

"ஒருவர்க்குச் சிறு துன்பமும் தம்மையறியாமலே செய்தாலும், அதைப் பெரிதாக எண்ணி வஞ் சம் தீர்க்கக் காத்துக்கொண்டிருப் போர் இந்த உலகிலே பலர் உளர். ஆனால், நான் கண்டதோ ஒரு செடி! நெய்தல் செடி!! அந்தச் செடிக்கு அன்று உழவன் இழைத்த கொடுமை பெரிது; மிகப் பெரிது. அதன் மலர்களின் மணமெல்லாம் கெடும்படி பிடுங்கி நீண்ட வரப்பில் வீசியெறிந்தான். இருந்தும் அந்த நெய்தல் செடி உழவன் தனக்கிழைத்த துன்பத் தைக் கிஞ்சிற்றும் எண்ணாது மீண் டும் அவனது வயலிலே வளர்ந்து மணம் பொருந்திய மலர்களுடன் விளங்குகிறது. அந்த உழவன் மீண்டும் நெற்பயிர் நடும்போது இந்த நெய்தற்செடிகளை அகற்றத் தான் போகிறான். அதற்காக இந்தச் செடி சினந்து கொள்ளப் போவதுமில்லை, அவன் செய்த கொடுமையை மறந்து மீண்டும் இதே இடத்தில் முளைக்கத்தான் போகிறது; முளைத்து மலர்களை முகிழ்க்கத்தான் போகிறது. நெய் தலின் பெருந்தகைமைதான் என்னே! என்னே!!" என வியந் தார்.

எந்த ஒன்றையும் வாழ்க்கை யோடு ஒப்பிட்டுப் பார்ப்பது புல வர்தம் வழக்கல்லவா? புலவரும் நெய்தல் இயல்பை வாழ்க்கை யோடு ஒப்பு நோக்கலானார். அவ் வேளையில் அவருக்கு நெய்தல் இயல்பு பெண்களிடத்தே அமைந்திருப்பதாகத் தோன்றி யது. இவ்வாறு அவர் மட்டும் துணிந்தால் போதுமா? இவ்வுண்

மையை — நெய்தல் இயல்பினர் பெண்கள் என்பதை — உலகோர்க்கு உரைக்க வேண்டாமா? எனவே, அவர் இந்த உண்மையை ஒரு அகப்பொருள் பாடலுள் வைத்து உலகுக்கு வழங்கினர்.

கொண்ட மனைவியை மறந்து பரத்தை ஒருத்தியுடன் பல காலம் வாழ்ந்துவிட்டுத் திரும்பும் தலைவன், இனித் தலைவி தன்னை ஏற்றுக்கொள்வாளா மாட்டாளா என்ற ஐயத்தால் தாக்குண்டு தலைவியின் தோழியைக் கேட்க, தோழி தலைவியின் இயல்பைத் தலைவனுக்கு விளக்குவதாய் அமைந்திருக்கிறது பாடல்.

"தலைவ! உழவர்கள் நெய்தலை அதன் மணம் கெடும்படி பிடுங்கி நீண்ட வரப்பிலே எறிந்தபோதிலும், உழவர்கள் தமக்கிழைத்த துன்பத்தை மறந்து மீண்டும் அவர்தம் வயலிலே வளர்ந்து மலர்ந்து எழில் படுத்தும் நெய்தலைப் போன்றவள்தான் தலைவி என்பதை நீ உணர்வாயாக. நீ பரத்தையுடன் பல காலம் வாழ்ந்து நின் துணைவிக்குத் துன்பம் தந்தாய். எத்துணைதான் நீ அவளுக்குத் துன்பம் இழைத்த போதிலும் அவற்றை மறந்து உன்னுடன் என்றும் போலவே அன்புடன் ஒழுகுவாள்" என்கிருள்.

"கைவினை மாக்கடஞ் செய்வினை முடிமார்
சுரும்புணு மலர்ந்த வாசங் கீழ்ப்பட
நீடின வரம்பின் வாடிய விடினும்
கொடியரோ நிலம்பெயர்ந்துறைவேமென்றநு
பெயர்த்துங் கடிந்த செறுவிற் பூக்கும்
நின்னூர் நெய்தல் அனையேம் பெரும
நீயெமக் கின்னு தனபல செய்யினும்
நின்னின் றமைதல் வல்லா மாறே"

[குறுந்தொகை 309]

நெய்தலை, கற்புக்கடன் பூண்டு ஆடவர் பிழை பொறுத்து இல்லத்தில் இன்ப எழில் குலுங்கச் செய்யும் பெண்களின் இயல்புக்கு உவமையாக்கியிருக்கும் புலவரது கற்பனைத் திறன் போற்றத்தக்கது; போற்றி மகிழத்தக்கது.

★

## ஏஜண்டுத் தோழர்களுக்கு

**1—4—58** முதல் புதுக்கணக்குப் போடுவதால், 31—3—58 வரையுள்ள **பாக்கி முழுவதையும்** 5—4—58க்குள் அனுப்பி வைக்கும்படி விற்பனையாளர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

பொறுப்பாளர்,
**"திராவிட நாடு"**

குறிப்பு:—

ஏஜண்டுகள், தங்களுக்குத் தேவைப்படும் பிரதிகளின் எண்ணிக்கை விபரத்தை, ஒவ்வொரு வாரமும் **செவ்வாய்க் கிழமைக்குள்** தெரிவித்துவிட வேண்டும்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எனவேதான், எந்தக் காரியத்தையும் செயல்படுத்தும் அதிகாரம் படைத்தவர்களிடம், இதனைச் செய்யுங்கள், அதனைச் செய்யுங்கள் என்று பேசுகிறோம், எழுதுகிறோம். இதனால், நாம் பேசமட்டும் தெரிந்தவர்கள்—செயல்பட அறியாதவர்கள் என்று அர்த்தமற்றுப் பேசிவிடுவதா?

இந்த உபகண்டத்தில் அதிக நாட்கள் பேசிக்கொண்டிருந்த ஒரு கட்சி இருக்குமானால், அது காங்கிரசைத் தவிர வேறு எந்தக் கட்சியுமல்ல என்பதை அரசியல் தெளிவு பெற்ற எவரும் மறுக்கமுடியாது. காங்கிரசுக் கட்சியோடு இதர கட்சிகளை ஒப்பிட்டுப் பார்த்தால் மற்றக் கட்சிகள் பேசிய அளவு மிகமிகக் குறைவென்றே கூறலாம்.

நீண்ட காலமாகப் பேசிய ஒரு கட்சி அந்தப் பேச்சின் பயனாகக் கிடைத்த செயல்படும் அதிகாரத்தைக் கையில் வைத்துக்கொண்டு, செயல் முறையை எட்டிப் பிடிக்க எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் கட்சியினரைப் பார்த்து, "இவர்களுக்கு என்ன தெரியும்; பேசத்தானே தெரியும்" என்று கூறுவது தன்னுடைய கடந்த கால அனுபவங்களை அதிகார போதையால் மறந்தும் மறைத்தும் கூறுவதாகும்.

செயல் முறையில் இருப்பவர்களைப் பார்த்து, இன்னின்ன காரியங்கள் நாட்டுக்குத் தேவை, அவைகளை இப்படியிப்படிச் செய்யவேண்டுமென்று கூறப்படும் எதிர்க்கட்சியினரின் ஆலோசனைகளுக்கு நாம் செவிசாய்ப்பதா என்ற ஒரே அழுக்கை உள்ளத்தில் ஏற்றி வைத்துக்கொண்டு, தம்மைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் "பேசுபவர்" பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியவர்கள் என்று கருதுவது அறிவுடைமையுமாகாது—அரசியல் யூகமுமாகாது.

பேசும் நிலையிலிருப்போர் கூறுவதைச் செயல்படுத்தும் நிலையில் இருப்போர் செவிமடுத்து, நாட்டுக்கு நல்ல பல காரியங்களைச் சாதிக்க முயற்சிப்பதைவிட்டு வறிதே பேசுவோரைப் பார்த்து ஏசிக்கொண்டா இருப்பது?

அதிகாரத்திலிருப்போர் செயலாலும், அதிகாரமற்றிருப்போர் பேச்சாலுமே காரியங்களைச் சாதிக்க முடியுமென்பதை இனிமேலாவது ஆட்சிப் பொறுப்பிலிருப்போர் உணர்ந்து நடந்துகொண்டால், நாட்டுக்கும் நல்லது, அவர்களுக்கும் நல்லது.

அதிகாரமும், ஒன்றைச் செயல்படுத்தும் பொருள் முதலிய வசதியுள்ளவர்களைப்பார்க்கிலும், பேசுந்திறன் ஒன்றை மட்டுமே மூலதனமாகக் கொண்டுள்ளவர்களின் சாதனையே வரவேற்கக் கூடியதும் பாராட்டக்கூடியதுமாகும்.

பேச்சால் திருந்திய மக்களும், செயலால் முன்னேற்றமடைந்த நாடுகளும் ஏராளம் என்பதை வரலாறுகள் நமக்கு எடுத்துரைக்கின்றன. இந்த மறுக்கமுடியாத உண்மையை அதிகாரத்திலிருப்போரும் அவர்பக்கமே சாய்வோரும் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டும்.

★




"ஏ, மூக்கா! எங்க எசமான் ரொம்ப நல்லவரடா. தர்மர்ன்னா அவருதான் தர்மர். காலையிலேருந்து, ஒரு மரத்தைப் பிளந்துபோட்டேன் — இரண்டு வண்டி விறகு தேறும். அம்மா, ஒருபடி நெல்லும், மத்தியானம் கஞ்சியும், வெற்றிலை பாக்குக்கு ஒரு அணாக் காசும் கொடுத்தாங்க. இதைப் பார்த்துக்கிட்டிருந்த எங்க எசமான் உள்ளே போனார்—ஒரு வேட்டியைக் கொண்டுவந்து, 'கட்டிக் கடா, அஞ்சான்!'னு கொடுத்தாரு. ஏழெட்டுப் பீத்தல்தான் இருந்துது. தைச்சுக் கட்டிக்கலாம். இந்தக் குணம் யாருக்கடா வரும்?"

*

*இரண்டு வண்டி விறகு! விலை கொடுத்து வாங்கினால், கிட்டத்தட்ட 50 ரூபாய் ஆகலாம்!!*

*பிளந்துபோட்ட அஞ்சானுக்கு, பழங்கஞ்சியும், ஒருபடி நெல்லும், ஓரணாக் காசும் கொடுக்கப்பட்டது. கிராமப்புறங்களில், அஞ்சான்களுக்கு, இவ்விதம்தான் தரப்பட்டும் வருகிறது. எசமான், அவன் "சேவை"யை மெச்சி, ஒரு பழைய வேட்டி அளித்தார்! இனித்தனக்கு உதவாதென்பதால்தான் அதைத் தர முன் வந்திருக்கவேண்டும் அவர்!!*

*ஏழையாய் மோழையாய், இடுப்பொடிந்தவனாய், ஏனென்று கேட்கவும் நாதியற்றவனாய், நாள் முழுதும் உழைத்தாலும் நாலணாவுக்கும் ஆறணாவுக்கும் அலைபவனாய்த் திண்டாடும் அஞ்சானுக்கு, எசமானின் அந்த ஒரு செயல், அகமகிழ்ச்சியூட்டிவிட்டது! தன்னவர்களுடன் பேசும்போது, அவரைத் தர்மர்—புண்ணியவான், என்று புகழ்ந்து பேசுகிறான்!!*

*இன்னொருவர் கையை நம்பி வாழும் நிலைமையிலிருக்கும் எவருக்கும், இந்தக் குணம் இருக்கும் போலும். நாலணா தந்துவிட்டால், 'நல்லவன்' என்கிறார், ஆபீஸ் பியூன். உழைப்பாளியொருவனுக்கு ஒரு வேளை உணவு அதிகமாகத் தந்துவிட்டால், உடனே தர்ம தாதா வாக்கப்பட்டு விடுகிறார். சிதறியது பனித்துளியானாலும், பாலைவனத்துக்கு அது வெள்ளம்தானே!*

**அரங்கண்ணல்**

*அதுபோல, பாலைவனம் போன்ற வாழ்க்கையை நடாத்தி வரும் பாட்டாளிகளுக்கும் பழங்குடியினருக்கும் மேல் சாதியினர் என்போர் காட்டிடும் சின்னஞ் சிறு அன்புகூடத் தேவாமிர்தமாகிவிடுகிறது — சிறு செயலானாலும், நன்றியுடன் அதை மதிக்கிறார்கள்—நாவார அதைப் புகழ்கிறார்கள்!!*

*சட்ட சபையிலே, ஆதித் திராவிட இனத்துக்கு அரசு செய்தது என்ன* **என்பது** *பற்றி எதிர்க்கட்சியினர் முழக்க, அதற்குப் பதிலளிக்க வந்த அமைச்சர் கக்கனும்—பழங்குடி மரபைச் சார்ந்தவர் அல்லவா? அதனாற்போலும், அஞ்சானைப்போல், நன்றிமறவாப் பண்புடன் நடந்துகொண்டிருக்கிறார்! ஆதித் திராவிடப் பெருங்குடி மக்களுக்காக நடத்தப்பட்டு வரும் அரிஜன சேவா சங்கங்களின் சிறப்பினைப் புகழ்ந்திருக்கிறார், "இராசகோபாலாச்சாரியார் ஏ. வைத்தியநாதய்யர், டாக்டர் டி. எஸ். எஸ். இராஜன் போன்ற பிராம்மணர்கள்தான் அரிசனங்களுக்கு முன்னேற்றம் தேடித் தந்தவர்கள் என்பதைத் தி.மு.க.வினர் உணரவேண்டும். அவர்கள் இத்துறையில் காட்டிய ஆர்வமும் சிரத்தையும் அதிகம்", என்று எடுத்துரைத்திருக்கிறார்.*

*

*"என்ன படையாச்சியாரே! ஏது இவ்வளவு ஆனந்தம்... மார்பெல்லாம் சந்தனம் மணக்கிறதே..."*

*"கோனார் அண்ணாச்சி! இன்னைக்கு முதலியார் வீட்டிலே, சாப்பாடு போட்டாங்க..."*

*"அதுதான் இவ்வளவு மகிழ்ச்சியோ?"*

*"சாப்பாடுன்னா எப்படித் தெரியுமா? அவுங்களோடு சரி சமமா உட்காரவைச்சு இன்னைக்கு சாப்பாடு போட்டாங்க!"*

*

*சரி சமமா உட்காரவைத்துச் சாப்பாடு போட்டது, ஒரு பெரிய புரட்சியாகக் கருதப்படுகிறது! புது மகிழ்ச்சியோடு பேசுகிறார், 'படையாட்சி' நடத்தியவராகக் கருதப்படும் படையாச்சியார்!!*

*வெறும் கூலியை மட்டும் கொடுத்த எசமானியைவிட, ஒரு பழம் கந்தலையும் போட்ட எசமானனும்; கூடத்தில் சரிசமமா உட்காரவைத்துச் சாப்பாடு போட்ட முதலியாரும்; ஒருபடி சிறந்தவர்கள் என அழைக்கப்படுவதில் ஆட்சேபமில்லை. அவர்கள் ஏனையவர்களைவிடச் சிறந்தவர்களே ஒழிய, முற்றிலும் சிறந்தவர்கள் என்கிற முடிவுக்கு வந்துவிட முடியாது!!*

**ஒருபடி சிறந்தவர்கள்**—*என்று கருதவும் அந்த ஒரு நிகழ்ச்சி மட்டும்*

போதாது. தொடர்ந்து அப்படியே அன்பு காட்டுகிறார்களா என்றும் கவனிக்கவேண்டும். விறகு அதிகமாக வெட்டியதால், பழங்கந்தல் கொடுத்தார் மிராசுதார்! ஊர்ப் பகைக்கு பக்கபலம் தேட, சம விருந்து நடத்தினார் மிராசுதார்!! — பிறகு, வழக்கம் போலத்தான் நடந்துகொண்டார் எனின், அந்தச் சிறப்புக்கும்கூட அவர்கள் இலாயக்கற்றவர்கள் ஆவார்கள்.

ஆச்சாரியார்—ராஜன் — வைத்தியநாதர் போன்ற பார்ப்பன குலத் தலைவர்கள், தீண்டாமை ஒழிப்பு என்பதில் அக்கரை செலுத்தினார்கள் என்பதை நாமும் ஏற்கிறோம்; அதற்காக மதிக்கவும் செய்கிறோம். தீண்டாமையை ஒழிக்க, கோயில் நுழைவு, சமபந்தி சாப்பாடு முதலிய காரியங்களையும் உற்சாகத்தோடு அவர்கள் செய்தார்கள்; அந்த ஆர்வத்துக்குச் சிரம் வணங்குகிறோம். இந்தக் காரியங்கள், ஒருபடிதானே ஒழிய, சமுக சீர்திருத்தத்தின் கடைசி முடிவு அல்ல!!

அஞ்சானுக்குப் பழந்துணி கொடுத்தார் மிராசுதாரர் — சம விருந்து வைத்தார் முதலியார். இருவரையும் இன்னொரு நாள் சந்தித்துப் பார்ப்போம். அன்று, அஞ்சான், மிராசுதாரர் விரும்பிய படி நடக்கவில்லை! இரண்டுவண்டி விறகுக்குப் பதில் அரைவண்டி கூட உடைக்கவில்லை — அப்போதும், இதே அன்பையா காட்டுவார்? ஒருபோதும் காட்டமாட்டார்!! படையாச்சியாரின் பக்கபலத்தை நாடிய வேலை முடிந்துவிட்டது, முதலியாருக்கு — அவருடைய உதவி தேவையில்லை — இப்போதும் அதே சம விருந்து வைக்கிறாரா? வைக்கிறார் எனின், அது சிறந்ததுதான்! இல்லையெனில், இரண்டு காரியமும், இலாப நோக்குடன் செய்யப்பட்டது — இரண்டுக்கும் பொதுநோக்குக் கிடையாது என்றே கருதப்படும்!!

தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு உரிமைகள் வழங்குவதில், இப்படி இலாப நோக்குடன் நடந்துகொள்வோர் உண்டு! அவர்களுக்குச் "சேவை" செய்வதன்மூலம், தங்களுக்கு ஒரு 'மவுசு' தேடிக்கொள்ள முயல்வோரும் இருக்கிறார்கள்!! பிராம்மணர்களைப் பழிசொல்லுகிறார்கள் —அவர்களுக்கு சேவா உணர்ச்சி இல்லையாதெனச் சொல்லுகிறார்கள் — மேல்சாதிக் காரர்களாகிய அவர்கள் எல்லோரையும் அழுத்திவைக்க விரும்புகிறார்கள் —என்கிற பழியை அறவே துடைத்திடவேண்டும் என்கிற தூயபணிக்குத் தம்மையே அர்ப்பணிப்பது ஒருவகை. இன்னொருவகை, அந்தப் பழியைக் கொஞ்சம் துடைத்திட, ஏதோ அப்போதைக்கப்போது "ஆர்வம்" காட்டுவதென்பது.

பார்ப்பன குலத்தில் பிறந்தவர் தான் வி. பி. இராமன் — பார்ப்பன குலத்தின் முன்னோடிகளாக விளங்கும் பெரியவர்களைப்போல வயதானவரல்ல; இளைஞர். எனினும், இவர் கொண்டிருக்கிற அளவுக்கு, சாதி ஒழிப்பிலும், சமுக பேதம் ஒழியவேண்டுமென்பதிலும், கக்கன் குறிப்பிடும் பிராம்மண குலத் தலைவர்களுக்கு ஆர்வம் உண்டோ எனின், ஐயம் தான் ஏற்படுகிறது.

*

தீண்டாமையும், உயர்வு தாழ்வும், நமக்கு ஒரு தீராத வியாதியாகும்! நமது மதம் எனப்படும் இந்து மதத்தில், இந்தப் பாகுபாடுகள் ஒழுங்காக வகுக்கப்பட்டு, அதுவே நீதியெனவும் கருதப்பட்டு, இதுநாள்வரையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இப்படி சாதிப் பாகுபாடுகள் ஏற்பட்டு, உயர்ந்த சாதியினர் பார்ப்பனர்கள்; அவர்களுக்கே சமுகத்தில் உயர்ந்த அந்தஸ்து உண்டு; ஏனைய வகுப்பினர் அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டியவர்கள்--என்கிற ஒரு முறை வகுக்கப்பட்டது, ஆதியில். அந்த முறையை எதிர்த்தே, புத்தர் தோன்றினார்! சமண மதமும் உருவாயிற்று!! சாதிபேதங்களை ஒழிக்கும் வகையில் உருவான அந்த மதங்களுடன் போட்டிபோடும் வகையில், இந்து மதத்தை விளக்கவும், விதிகளைச் சாதாரணமாக்கவுமே, பிறகு சில மதாச்சார்யார்கள் தோன்றினர். சங்கரர், மாத்துவர், இராமானுஜர் போன்ற மதாசார்யார்கள், புது விளக்கங்கள் அளித்தனர் இந்து மதத்துக்கு. மூவரில் ஒருவரான இராமானுஜர், ஒருபடி மேலே சென்றார், "யாராயிருந்தாலும், வைணவத்தை ஏற்றுக் கொண்டவர்கள் எல்லோரும் அய்யங்கார்கள்தான்" என்றார் அவர். ஆனால், இந்தமூன்றுமதாசார்யார்களும், இந்துமதத்தின் சில குறைபாடுகளை நீக்கிட முயன்றவர்களே ஒழிய, மூலத்தில் 'கைவைக்க' விரும்பவில்லை. இந்த மூன்று மதாசார்யார்களின் பரம்பரையாக இன்றுள்ளவர்கள், இந்து மதத்தின் ஏஜண்டுகள் போலவும்—பழைய வர்ணாசிரம முறை ஒழியக் கூடாதென்றும் — அது ஒழியாமலிருப்பதற்கு என்னென்ன சீர்திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டுமானாலும் மேற்கொள்ளலாமென்றும், கூறுகிறார்கள். அந்த வகையைச் சேர்ந்தவர்கள்தான், கக்கன் குறிப்பிடும் பார்ப்பனக் குலத் தலைவர்கள்—நச்சு மரத்தை வெட்டுபவர்கள் அல்ல! அதற்கு என்ன முலாம் பூசலாம், எப்படி வர்ணம் கொடுக்கலாம் என்று வாதாடுபவர்கள்தான்!! சமீபகாலமாக, பார்ப்பன குலத்தில், இருவகை விழிப்புணர்ச்சி ஏற்பட்டு வருகிறது.

ஒன்று, சமுக அநீதிகள் அறவே களைந்தெறியப்படவேண்டும் என்பது! இன்னொன்று, முலாம் பூசப்படவேண்டும் என்பது!!

ஒருவகை, அஞ்சானும் ஆறுமுகமும், ஒரே நிலையில் "மனித இனம்" என்கிற முறையில் வாழ வேண்டும் என்று நினைப்பது.

இன்னொருவகை, அஞ்சானும் ஆறுமுகமும் அவரவர்கள் இடத்திலேயே இருக்கவேண்டும். வேண்டுமானால், மிராசுதாரரைப் போல் கந்தல் துணி கொடுப்போம்—சமவிருந்து செய்வோம்— என்று எண்ணுவது.

கக்கன் குறிப்பிடும் ஆச்சாரியார் போன்றவர்களுடைய சேவை,

### ஐக்கிய மாகாணத்திலும்!

"ஆதித்திராவிடப் பெண்களை மணந்துகொள்வோருக்கு சர்க்காரில் வேலை கொடுக்க வேண்டும். இத்தகைய நபர்களுக்கு முன்கூட்டியே சம்பள உயர்வு அளிக்கப்பட வேண்டும். ஆதித்திராவிடர்களுக்குப் பாதகமாக இருக்கும் பகுதிகளை மனுஸ்மிருதியிலிருந்து நீக்கவேண்டும்"

ஐக்கியமாகாண சட்டசபையில், ராஜநாராயனன் எனும் உறுப்பினர், இவ்விதம் பேசியுள்ளார்!!

இரண்டாவது வகையாகும். திராவிட முன்னேற்றக் கழகம், முதல் வகையையும், இராமன் போன்ற இளைஞர்களையும்தான் எதிர்பார்க்கிறதே ஒழிய, இரண்டாவது வகையை அல்ல!

ஆச்சாரியார் போன்றவர்கள், இன்று பூசவிரும்பும் வர்ணத்தைப் பூச முயன்றவர்கள்தான் சங்கரரும், மாத்துவரும், இராமானுஜரும். இவர்கள் செய்த சேவையை மிகப் பெரிது என்றால் அவர்களை போதும் — அவர்களுடைய சீடகோடிகளாக விளங்கும் சங்கராச்சாரியாரும் அவர்தம் சீடகோடிகளுமேபோதும். உலகம் அறிந்த ஆச்சாரியாரிடமிருந்தும், அவரது ஒலிபெருக்கிகளான இந்து, மித்திரன் போன்றவைகளிடமிருந்து; கக்கன் குறிப்பிடும் பார்ப்பனகுலத் தலைவர்களிடமிருந்தும், நாம் எதிர்பார்ப்பது, சமுக அநீதியினை அறவே ஒழித்து, ஒரே மனித இனம் உருவாக முன்வர வேண்டுமென்பதுதான்! அவர்கள், அந்தப் பாதையில் அன்றும் சரி—இன்றும் சரி, வர மறுக்கிறார்கள்—அதற்குப் பதில், நன்மைகளைச் செய்வதுபோல் பாவனை செய்துகொண்டு, ஆண்டானும் அடிமையும் நீடிக்கும் சமுக அமைப்புக்கே முயன்றுகொண்டிருக்கிறார்கள்?!

❀

அவர்தம் முயற்சியே பெரிது—ஆகா, என்னே அவர் தம்சிறப்பு—என்று கக்கன் பாடும் அந்தாதி, பீத்தலாடை பெற்று மகிழும் அஞ்சாநெயே கவனமூட்டுகிறது, நமக்கு! இதனால், கக்கனின் நன்றி மறவாத நல்ல பண்பு விளங்குகிறதே ஒழிய — சமுக பேதத்தின் அடிப்பீடத்தை மாற்றும் நோக்கம் தெளிவாகவில்லை.

ஆண்டாண்டு காலமாக நமது சமுகத்தில், எப்படியோ ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டு, பீவர்லி நிகோலஸ் போன்ற அந்நியர்கள் இங்கு வரும்போதெல்லாம் அதிசயமும் ஆச்சரியமுக் அடையும் வகையில் வளர்ந்து, சமுகம் கோரமான ஒரு சர்க்கஸ் கூண்டுபோல, இன்று காட்சியளிக்கிறது.

இது மாற, புதியதோர் சமுக அமைப்பு ஏற்பட வேண்டும்—அங்கு மனிதன்தான் இருக்க வேண்டுமே ஒழிய — அய்யரும் நாடாரும், முதலியாரும், சாம்பானும், சக்கிலியும் இருத்தல் ஆகாது. அப்படிப்பட்ட ஒரு சமுக அமைப்பு ஏற்பட்டுவிட்டால், பொருளாதார அமைப்பும் உண்டாகும்படி செய்துவிட்டால்—பாலைவனம், சோலைவனமாகும்! அதனைத்தான், தி.மு.க. விரும்புகிறதே ஒழிய, பனித்துளி சிந்திவிட்டு, பாராட்டுப் பெறும் காரியங்களையல்ல!!

ஆச்சாரியார் போன்ற பெரிய தலைவர்கள், முறைகளில் சீர்திருத்தம் செய்ய விரும்புகிறார்களே ஒழிய, சாதியை ஒழிக்க முன்வரவில்லை. சர்வபள்ளி இராதாகிருஷ்ணன், இந்தக் கிழமை, நியூயார்க் நகரில் பேசியிருக்கிறார், "உலகத்தில் ஒரே ஒரு மதம்தான் ஏற்பட வேண்டும்" என்று. இனிக்கிறது கேட்க! இந்துவும், மித்திரனும், அச்செய்தியை இனிக்கும் வகையில், தருகிறார்கள் நாட்டுக்கு!! மனித இனம்—மனிதன் என்கிற மதம்—ஏற்படவேண்டும் என்று எழுதவும்கூடச் செய்கிறார்கள். ஆனால் அன்று மாலையிலேயே, சங்கராச்சாரியாரைத் தேடிப்போய், சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, பிரசாதம் பெற்றுத் திரும்புகிறார்கள்! தமது பிள்ளைகளுக்கும் பேரர்களுக்கும் பூணூல் அணிவித்து, பிரம்ம புத்திரர்களாக்கிக் கொள்வதில் ஆசை காட்டுகிறார்கள்!

**இந்த நிலை அறவே ஒழிய வேண்டும்—இராமன் போன்ற இளைஞர்கள் பார்ப்பன வகுப்பிலிருந்து முன்வரவேண்டும்—என்பதையே தி. மு. க. விரும்புகிறது.**

நன்றி காட்டுவதும், நத்துவதும், 'எசமான் நல்லவர்' என்பதும், கந்தல் பெற்றதால் மகிழ்வதும், சரிசம உணவு கிடைத்ததால் ஆனந்தம் அடைவதும்—தற்கால சாந்தியே ஒழிய, நிரந்தரமானதல்ல! கக்கன் அவர்கள் சார்ந்திருக்கும் காங்கிரஸ் கட்சியும், ஆச்சாரியார் போன்றவர்களைப் போன்று, தற்கால சாந்தியில் மனமகிழ்கிறதே ஒழிய — கோயில் நுழைவு செய்தோம், சேவாசிரமங்கள் வைத்தோம், என்று காட்டிக் கொள்வதில் ஆனந்தமடைகிறதே ஒழிய—மூல நோயை அகற்றுவதில் முன்வரவில்லை! காங்கிரஸ் மட்டுமல்ல, பல கட்சிகளும், ஆதித்திராவிடர்களின் பிரச்சினையை கட்சிக் காரியமாக கருதுகின்றனவே ஒழிய தேசீயப் பிரச்சினையாக எண்ணவில்லை!

அதனால்தான், சட்டசபையில் அண்ணாதுரை தெளிவுபடுத்தினார்:—"இது, ஒரு கட்சிப் பிரச்சினை அல்ல, நாட்டின் பிரச்சினை. பழங்குடி மக்களை வைத்து இலாபம் பெறும் கட்சிக் காரியமாக இதனைக் கருதாமல்—சகல கட்சிகளும் ஒன்று சேர்ந்து செய்யும் ஒரு காரியமாகக் கவனிக்க வேண்டும்" என்று.

★

# அன்பழைப்பு

30—3—58 ஞாயிறு காலை எனது இல்லில் அண்ணாதுரை, M. L. A. தலைமையில், எனது மகள் செல்வி **தென்றலை,** சேரங்குளம், திரு. சுவாமிநாதர் அவர்கள் செல்வன் **துரைமாணிக்கத்திற்கு** வாழ்க்கைத் துணைநலமாக்கும் மண விழாவுக்கு வருகைதருமாறு கேட்டுக்கொள்கிறேன். தோழர்கள் க. அன்பழகன், M. L. A., என். வி, நடராசன், சி. பி. சிற்றரசு, டி. வி. நாராயணசாமி, இராம. அரங்கண்ணல், ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

**ப. நாராயணசாமி.**

மன்னார்குடி,
26—3—58.

தங்கள் வரவை அன்புடன் எதிர்நோக்கும்:—

மு. கருணாநிதி, M. L. A. ப. நடனசிகாமணி.